
Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்
மலர் - 26 இதழ் - 11 நவம்பர் 2013

தனிப்பிரதி
ரூ.9/-







புதிய நூல் வெளியீடு




650 பாடல்கள் நூல் வெளியீடு



கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதி




கலந்து கொண்ட சகோதரர்களில் ஒரு பகுதி





சிறுவர் வகுப்பின் போது

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 1 |
| 2. ஏன் கிறுஸ்தவம்... | 9 |
| 3. பெண்கள் பகுதி | 14 |
| 4. வாலிபர் பகுதி | 17 |
| 5. சிறுவர் பகுதி | 21 |
| 6. நிழலும் நிஜமும் | 23 |
| 7. அடிப்படைக்குத் ... | 26 |
| 8. வசன ரீதியான ... | 29 |


★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 26 NOVEMBER - 2013 Issue - 11


ஆசிரியர் உரை

# இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்

**நீ**ங்களும், நானும் வாழும்படியாகப் படைக்கப்பட்ட இம்மண்ணுலகைப் பாவத்தின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுக்கும் படியாக விண்ணுலகத்திலிருந்து அனுப்பப்பட்ட தேவ மைந்தனாகிய இயேசு ஆண்டவர் " ஒரு மாபெரும் போதகர் " என்பதை ஆன்றோர்களும், சான்றோர்களும் எவ்வித சர்ச்சைக்கும் இடமில்லாமல் ஏகமனதாக ஏற்றிருக்கிறார்கள். இப்படி ஏற்றுக்கொண்டதற்குக் காரணங்கள் பல உண்டு. ஆம், அவருடைய போதகத்தின் எளிமை, போதித்த கருத்துக்களின் வலிமை, போதிக்கப்பட்டவைகளின் யதார்த்த நிலைமை, அவைகளில் இழையோடியிருந்த ஆவிக்குரிய தன்மை என்று நாம் காரணங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். அவைகளுக்கு முத்தாய்ப்பாக இன்னொரு உண்மையையும் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இதை ஆவியானவரும் தம்முடைய வார்த்தைகளில் ஆமோதிக்கிறார். " அவர்கள் கேட்டறியும் திராணிக்குத்தக்கதாக, அவர் இப்படிப்பட்ட அநேக உவமைகளினாலே அவர்களுக்கு வசனத்தைச் சொன்னார் " (மத். *4:33*) என்பது. தனக்கு முன்பாக அமர்ந்து கொண்டிருப்பவர்களைப் பற்றிய சரியானதொரு புரிந்து கொள்ளுதல் இல்லாமல் பேசப்படும் பேச்சு ஒரு பேச்சே அல்ல. அப்படிப்பட்டவர் ஒரு பேச்சாளருமல்ல. ஆனால், ஆன்மீக உலகில் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்களின் ஆட்சிதான் படு ஜோராக நடந்து கொண்டுள்ளது.

சரி, இரட்சகராகிய இயேசுவானவர் இப்பூமியின் வாழ்க்கையில் ஏராளமான பிரசங்கங்களைச் செய்திருந்தாலும் பெயர் சொல்லப்

படாத ஒரு மலையின் மேல் ஏறிச் செய்த பிரசங்கமானது, பிரசங்கங் களின் இமயமாகப் போற்றப்பட்டுக் கடந்த ஈராயிரம் ஆண்டுகளாக இப்பூமி உருண்டையின் எத்திக்கிலும் எதிரொலித்து வருகிறது. இயேசு ஒரு மாபெரும் போதகர் என்பதற்குத் தன்னிகரில்லா சாட்சியாகத் திகழும் மலைப்பிரசங்கத்தின் ஆரம்பத்திலே வருவதுதான் பாக்கிய வசனங்கள். ஒருவனை ஆசீர்வாதங்களுக்குச் சொந்தக்காரனாக மாற்றும் வல்லமை பாக்கிய வசனங்களுக்கு உண்டு. ஆம், துன்மார்க்க மனிதரை சன்மார்க்கராகவும், துர்ப்பாக்கிய மாந்தரை மெய்ப்பாக்கிய சாலிகளாகவும் மாற்றும் வல்லமை இயேசுவின் வார்த்தைகளுக்கு உண்டு. அதுமாத்திரமல்ல, இயேசு ஆண்டவர் அந்நாட்களில் சுற்றி நடந்து போதித்த " பரலோக ராஜ்ஜியத்தின் " அங்கமாக ஒருவன் இருப்பதற்கு அவசியமான அடிப்படைப் பண்புகளும் இவ்வசனங் களில் அடங்கியுள்ளது. அப்படிப்பட்ட அரிய பண்புகளில் ஒன்றை வெளிப்படுத்தும் வசனம் தான், இம்மாதத்திற்கான நம்முடைய தலைப்பாக உள்ளது.

இதைக் குறித்து மேலும் நாம் படிப்பதற்கு முன்பாக, நமது ஆசானின் ஆச்சாரப்படி மலைப் பிரசங்கத்தின் பின்னணி பற்றியும், பாக்கிய வசனங்களின் மேன்மை பற்றியும் கொஞ்சம் அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

மலைப்பிரசங்கம் என்பது, மலை என்று பொதுவாக நாம் எதை அறிந்து வைத்திருக்கிறோமோ அப்படிப்பட்ட ஒரு மலையிலிருந்து செய்யப்பட்ட பிரசங்கம் அல்ல. இயேசுவானவரின் பிரசங்கத்திற்குப் பெருமை சேர்த்த அந்த மலையானது கலிலேயாக் கடற்கரையின் வட கிழக்குப் பகுதியில், சுமார் 60 அடி அளவுக்கு உயர்ந்து காணப்பட்ட பரவலான ஒரு குன்று. தாபோருக்கும், திபேரியாவிற்கும் இடையே இக்குன்றுப்பகுதி அமைந்துள்ளது. இக்குன்றின் உச்சியிலிருந்து ஒரு நான்கு மைல் தூரத்திலுள்ள கெனசரேத் சமவெளியை நாம் காண முடியும். செங்குத்தாக இல்லாமல் பரவலாக இம்மலை இருந்த படியால், அவரிடத்திலிருந்து அற்புத சுகத்தைப் பெறவும், அவரு டைய பிரசங்கத்தைக் கேட்கவும் வந்த திரளான மக்கள் உட்காரு வதற்குத் தோதான இடமாக இம்மலை இருந்தது (மத். 4:24,25).

பெலஸ்தீனா தேசமெங்கும் நன்மை செய்கிறவராகச் சுற்றி நடந்து ஊழியம் செய்த இயேசுவின் இரண்டாம் வருட ஊழிய நாட்கள் அவை. அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிருந்த சமயம் அது (மத். 4:24). இயேசு ஏறின இந்த மலைக்கும், மோசே ஏறின சீனாய் மலைக்கும் உபதேசத்தினடிப்படையில் ஒரு தொடர்பு இருப்பதை நாம் மலைப்பிரசங்கத்தின் வாயிலாகக் காணமுடியும். ஆம், அங்கே, தேவனால் கொடுக்கப்பட்ட பிரமாணங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாக மோசே சீனாய் மலையின் மேல் ஏறினார். ஆனால், அப்பிரமாணங்களுக்குப் புதிய விளக்கம் தந்து,

கற்றுத்தரும்படியாய் இயேசு இம்மலையின் மீது ஏறினார். ஆகவே தான், இயேசுவானவர் மோசே இப்படிச் சொல்லியிருக்கிறார், *நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்* என்று பல இடங்களில் அழுத்திக் கூறியுள்ளார் (மத். 5:22,24,28,32, 34,39,44). மலைப்பிரசங்க வார்த்தைகள் மூலம் புதிய மார்க்கத்திற்கான (யோவான் 14:6) ஆரம்பத்தை இயேசு மிகவும் ஆணித்தரமாகத் தொடங்கி வைத்தார். உண்மை நிலை இப்படியாக இருக்கும் போது, பழைய ஏற்பாடு நம்மை இன்னும் கட்டுப்படுத்துகிறதென்றும், மோசேயின் பிரமாணங்கள் இப்பொழுதும் கடைப்பிடிக்கப்பட வேண்டியவைகளென்றும் எப்படித்தான் கூறுகிறார்களோ தெரியவில்லை (கொலோ. 2:14,15) எங்கே போய்த் தலையை முட்டிக் கொள்வதென்றும் புரியவில்லை.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த மலைப் பிரசங்கத்தின் ஆரம்பத்தில் வருபவைதான் பாக்கிய வசனங்கள். ஆம், ஒருவனைப் பாக்கியவானாக மாற்றும் வசனங்கள். " பாக்கியவான் " என்று தமிழில் உள்ள வார்த்தை, கிரேக்க மொழியில் உள்ள வார்த்தையின் முழுப் பொருளையும் கொண்ட வார்த்தை அல்ல. ஆயினும், மிக நெருக்கமாக உள்ள இவ்வார்த்தைக்கு இப்படியாக அர்த்தம் கொடுக்க முடியும். "மகிழ்ச்சியானவன் ", "ஆசீர்வாதங்களுக்குச் சொந்தமானவன்", "நற்பேறு பெற்றவன் ", " கொடுத்து வைத்தவன்" என்று. பாக்கியமுள்ள நிலை என்பது, வெளிப்புற சூழ்நிலைகளால் எவ்விதத்திலும் பாதிக்கப்படாத மகிழ்ச்சி மற்றும் ஓர் அபார நம்பிக்கையை உள்ளடக்கிய ஓர் அனுபவம். உதாரணமாக, ரோமச் சிறைச்சாலையில் இருந்து கொண்டு, பிலிப்பு பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு, "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன் " (பிலி. 4:4) என்று பவுலடியார் எழுதுகிறாரல்லவா அந்நிலையோடு கிட்டத்திட்ட இசைந்து போகக் கூடிய ஓர் நிலை.

இயேசு ஆண்டவர் இப்பாக்கிய வசனங்களை ஓர் ஒழுங்கினடிப் படையில் போதித்துள்ளார். எட்டு வசனங்களைக் கொண்ட பாக்கிய வசனங்களின் முதல் மூன்று வசனங்கள், ஒருவனுடைய ஆவிக்குரிய தேவைகள் பற்றியும், " மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது " என்று இயேசு பிரசங்கித்த ராஜ்ஜியத்துக்குள் பிரவேசிப்பதற்கான மனோபாவம் பற்றியும் போதிக்கிறது. ஆம், பாக்கிய வசனங்களின் முதல் வசனம், ஆவியில் எளிமைப்படுவது பற்றியும் (5:3), அடுத்த வசனம், அப்படி எளிமைப்படுத்தி, தேவனுடைய பார்வையில் தான் யார் என்பதைக் கண்டு அதன் மூலம் படும் துயரம் பற்றியும் (5:4) பிறகு அந்தத் துயரம் தேவச் சித்தத்திற்கு வழி நடத்துவதால் பெற்றுக் கொள்ளக்கூடிய சாந்தகுணம் பற்றியும் போதிக்கிறது (5:5). தொடர்ந்து வரும், " நீதியின் மேல் பசிதாகம் உள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தி அடைவார்கள் " (5:6) என்ற வசனமானது,

மேற்கண்ட இம்மூன்றையும் அடைவதற்கான வழியாகச் சொல்லப் பட்டுள்ளது. எஞ்சியுள்ள நான்கு பாக்கிய வசனங்களும், தேவப் பண்புகளைப் பெற்றுக்கொள்ளும் வழி குறித்துப் போதிக்கிறது.

இயேசு இரட்சகர் இங்கே போதித்த பாக்கிய வசனங்களின் ஆழத்தைப் புரிந்துகொள்ள ஒருவனுக்கு ஆவிக்குரிய பார்வை அவசியம். அந்தப் பார்வையும், நீதியின்மேல் பசியும், தாகமும் இல்லாதபடியால் தான், இயேசுவின் காலத்தில் அவருடைய உபதேசங்களை ஜனங்கள் புரிந்து கொள்ள வேண்டிய அளவு புரிந்து கொள்ள முடியாமல் திணறினர். நம்முடைய நாட்களிலும் இது உண்மையாகத்தான் இருக்கிறதென்பதை நான் சொல்லி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன்.

இருக்கட்டும். இப்பொழுது நம்முடைய தலைப்புக்கான ஆறாம் பாக்கிய வசனத்துக்குச் செல்லுவோம். " இருதயத்தில் சுத்தமுள்ள வர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் " *(5:8)*. இதைச் சுலபமாகப் புரிந்துகொள்ள இந்தப் பாக்கிய வசனத்தை இரு சொற்றொடர்களாகப் பிரித்துப் படிக்கலாம். சரியா?

## I. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்

மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தின் ஆறாம் பாக்கிய வசனத்தில் வரும் முதல் சொற்றொடராகிய " இருதய சுத்தம் " பற்றி நாம் முதலில் பார்ப்போம்.

மலைப் பிரசங்கத்தின் மூலம் மாற்றத்தைக் கொண்டு வரும் படியாக எத்தனித்த இயேசு இந்தப் பாக்கியவசனத்தின் மூலம் இருதயத்தைத் தொடுகிறார். ஒருவனின் பக்தி வாழ்க்கைக்கும், இருதயத்திற்கும் என்ன சம்பந்தமுண்டு என்பதை அவர் அறிவார். இருதயம் எண்ணங்களின் இருப்பிடமாகவும், நினைவுகளின் தோற்ற மாகவும் உள்ளது (ஆதி. *6:5*). அங்கிருந்து தான் எல்லாம் புறப்படு கிறது. தான் வாழ்ந்த காலத்தில், மனந்திரும்புதலுக்கு மக்களைக் கண்ணீரோடு கத்தி அழைத்த தீர்க்கன் எரேமியா இருதயம் பற்றிக் கூறுவதைக் கவனியுங்கள். " எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகாகேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத் தக்கவன் யார்? " என்று (எரே. *17:9*). இந்தக் கேள்விக்கான பதில், எந்த ஒரு மனிதனாலும் முடியாது என்பது தான். ஆம், மனிதனால் பிறர் மனதை அறிய அடியாது. ஆனால், மனிதனை உண்டாக்கின தேவனால் முடியும்.

இஸ்ரவேலுக்கான ராஜாவைத் தெரிந்தெடுக்கும் முயற்சியில் தேவ வழிநடத்துதலோடு இறங்கின சாமுவேல் தீர்க்கன் நம்மைப் போன்ற ஒரு பார்வை கொண்டு செயல்பட்டான். அப்பொழுது, "கர்த்தர் சாமுவேலை நோக்கி; நீ இவனுடைய முகத்தையும், இவனு டைய சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்; நான் இவனைப்

புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1 சாமு. 16:17) ஆம் தேவன் இருதயத்தைப் பார்க்கிறார். ஆகவே தான், ஞானியைக் கொண்டு ஆவியானவர் இவ்விதம் நம்மை எச்சரிக்கிறார். "*எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்...*" என்று (நீதி. 4:23).

இப்படிப்பட்ட இருதயம் சுத்தமாக இருக்கவேண்டுமென்பது தான் இயேசுவின் போதனை. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த யூதர்கள் இருதய சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் புறம்பான சுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இயேசு இதைக் கடுமையாகச் சாடினார். " மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ! போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருக்கிறது " என்றார். இன்னும், " அப்படியே நீங்களும் மனுஷருக்கு நீதிமான்கள் என்று புறம்பே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள் " என்றும் சொன்னார் (மத். 23:25,28). இதுதான் இயேசுவின் நாட்களில் வாழ்ந்த யூதர்களின் யதார்த்த நிலை.

ஆகவேதான், இயேசுவும், அவருக்கு முன்னோடியாக வந்த யோவான் ஸ்நானனும், " மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறது " என்று கூறி தங்கள் ஊழியத்தை ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்துதான், இயேசு நீங்கள் ஏன் இப்படிப் பக்தி வேடம் பூண்டு அலைகிறீர்கள், உங்களைப் பாக்கியவான்களாக மாற்ற இருதயத்தைச் சுத்தப்படுத்துங்கள் என்று வலியுறுத்துகிறார்.

பொதுவாக " சுத்தம் " என்பது, இரண்டு வகையானது. 1. அசுத்தங்கள் எதுவும் இல்லாதது. 2. எவ்விதக் கலப்படமும் இல்லாதது. இந்த இரண்டு பொருளோடும் ஒத்து வருவதுதான் " சுத்தம் ". இப்படிப்பட்ட சுத்தம் தான் தேவனுக்குப் பிரியமாயிருக்க விரும்பும் ஒவ்வொருவருடைய இருதயத்தில் காணப்படவேண்டுமென்பது இயேசுவின் எதிர்பார்ப்பு. மறுபடியுமாக, உண்மை நிலை இதற்கு நேர் எதிராக இருந்தது. " *இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்* " (மத். 15:8,9).

அருமையானவர்களே, மனிதர்களுடைய இருதயம் எப்படிப்பட்டதென்றும், இயேசு எந்தமாதிரியான இருதயம் பற்றி பாக்கிய வசனத்தில் உபதேசித்தார் என்றும் கவனித்தோம். இங்கே கேள்வி என்னவென்றால், நம்முடைய இருதயம் எப்படியிருக்கிறது என்பது

தான். மாயவித்தைக்காரனாகிய சீமோனுடைய இருதயம் எப்படி தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிருக்கவில்லையோ அதுபோல் தான் பெரும்பாலான நம்முடைய இருதயங்களும் இருந்து கொண்டு உள்ளது. இதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. செம்மையற்ற நம் இருதயத்தைத் தேவன் அறிகிறவராக இருக்கிறார் (சங். 44:21). வெறுமனே அல்ல, " ஆராய்ந்து " அறிகிறவராக இருக்கிறார். அப்படியானால், நாம் என்ன செய்யப்போகிறோம்? துர்ப்பாக்கியமுள்ளவர்களாகவே இப்பூமியின் வாழ்க்கையை நீட்டித்து மரிக்கப் போகிறோமா? அல்லது பாக்கியமுள்ளவர்களாக மாற விருப்பம் கொண்டிருக்கிறோமா? சொல்லுங்கள்.

ஒருவேளை, பாக்கியமுள்ளவர்களாக மாற விருப்பமுண்டு என்று சொல்வோமானால், உடனடியாகக் கேடும், திருக்கும், அவபக்தியும் நிறைந்த நம் இருதயத்தைச் சுத்தமாக்க வேண்டும். இங்கே எழும் கேள்வி, அதை எப்படிச் செய்வதென்பது. அந்தக் குறிப்பிட்ட பாக்கிய வசனத்தில் இயேசு அதற்கான பதிலைக் கொடுக்கவில்லை. ஆனால், அவருடைய உபதேசத்தைக் கடைப்பிடித்த அப்போஸ்தலன் பேதுரு ஒரு சமயம் இப்படியாகக் கூறியுள்ளார். " *விசுவாசத்தினாலே அவர்கள் இருதயங்களை அவர் சுத்தமாக்கி, நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமிராதபடி செய்தார்* " என்று (அப். 6:7; பிலி. 1:27). அதாவது, இவ்வசனத்தின்படி இருதய சுத்தம் நற்செய்திக்குக் கீழ்ப்படிகிறதினாலே வருகிறதாக உள்ளது.

அப்படியானால், நம்மில் எத்தனைபேர் கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிவதால் வரும் இருதய சுத்தத்தைப் பெற்றிருக்கிறோம்? இப்படிப்பட்ட இருதய சுத்தத்தைப் பெற்றுக்கொள்ள ஒருவன் விசுவாசிக்க வேண்டும். (எபி. 11:6) மனந்திரும்ப வேண்டும் (அப். 2:38), இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும் (ரோமர் 10:9,10), பாவமன்னிப்புக்காகத் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற வேண்டும் (அப். 22:16). இவைகளைச் செய்கிற ஒருவனுடைய இருதயம் சுத்தமாகி இரட்சிக்கப்படுகிறான். அப்படி இரட்சிப்படைபவர்களைக் கிறிஸ்து அவருடைய சபையிலே சேர்க்கிறார் (அப். 2:47). இதன் மூலம், அவர்கள் பாக்கியவான்களாக மாற முடியும்.

## II. தேவனைத் தரிசிப்பார்கள்

மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தின் ஆறாம் பாக்கிய வசனத்தில் நாம் பார்க்க விரும்பும் அடுத்த சொற்றொடர் " தேவனைத் தரிசித்தல் " பற்றியது.

தேவனுடைய பார்வையில் பாக்கியவான்களாக இருக்க எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமென்று பாக்கிய வசனங்கள் மூலமாகப் போதித்த இயேசுவானவர், இவ்வசனத்தில் தேவனைத் தரிசிக்க என்ன செய்ய வேண்டுமென்று போதித்தார். இங்கே நாம்

தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு மாபெரும் உண்மை, நாம் யாரும் தேவனை சரீரக் கண்களால் தரிசிக்க முடியாது என்பது. அப்படியானால், இயேசு பொய் சொல்லியிருக்கிறாரா என்று கேட்டுவிடாதீர்கள். ஏனெனில், இயேசுவின் வாயில் வஞ்சனை காணப்படவில்லை " (1 பேதுரு 2:22).

இதுகுறித்த உண்மையை வேத வசனங்கள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. " *தேவனை ஒருவரும் ஒருக்காலும் கண்டதில்லை. பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்* " (யோவான் 1:18). " தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). ஆவியாயிருக்கிற தேவனை எந்த ஒரு மனிதனும் சரீரக் கண்களால் பார்க்க முடியாது.

ஆனால், இன்றைய கிறிஸ்தவத்தில் என்ன நடக்கிறது? ஏன் பரலோகம் சென்று தேவனைப் பார்த்து வந்தேன் என்று சிலரும், நான் இயேசுவிடம் பேசி வந்தேன் அவர் 16 வயது இளைஞரைப் போல் காட்சி தருகிறார் என்று வேறு சிலரும் போட்டி போட்டுக் கொண்டு சொல்லி, ஊழியம் என்ற பெயரில் அட்டூழியம் செய்கிறார்கள். கிறிஸ்தவ உலகமும், வெளிப்படுத்தப்பட்டுள்ள வேத வசனங்களுக்கு எதிராகத் துணிந்து இவர்கள் பொய் சொல்லுகிறார்கள் என்பதைக் கண்டுபிடித்து வெறுத்து ஒதுக்காமல், அப்படிப்பட்டவர்களுக்குச் சிவப்புக் கம்பள வரவேற்புக் கொடுக்கிறது! விபரமறிந்தவர்களும் இதற்கு விதிவிலக்காக இல்லையென்பது தான் வேதனையிலும் வேதனை. என்ன செய்வது?

இங்கே மறுபடியும் வரக்கூடிய கேள்வி, "அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் " என்று சொன்னதின் பொருள் என்ன என்பது தான். இயேசு சரியாகத்தான் சொல்லியுள்ளார். ஆம், நாம் தேவனை இம்மையிலும், மறுமையிலும் தரிசிக்க முடியும். இதற்குத் தேவை ஆவிக்குரிய கண்களும், ஆவிக்குரிய பார்வையும். அப்படியானால், இந்தப் பார்வையோடு தேவனைத் தரிசித்தவர்கள் இருக்கிறார்களா? ஆம், இருக்கிறார்கள். தேவனுடைய இருதயத்துக்கு ஏற்ற தாசனாக விளங்கிய தாவீது அவரை இயற்கையின் வழியாகப் பார்த்தார். " வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது..... " என்று சொல்லி. (சங். 19:1,2) இன்னும், தேவ மனிதனாகிய மோசே போல் நாம் நம்முடைய விசுவாசக் கண்களால் தேவனைப் பார்க்க முடியும். "விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான் " (எபி. 11:27). இங்கே நாம் அறிந்து கொள்ள வேண்டியது ஆவிக்குரிய பார்வையோடு தேவனைத் தரிசிக்க முடியும் என்பது.

இப்படி இம்மையிலே அவரை தரிசிப்பதோடல்லாமல் மறுமையிலும் தரிசிக்க முடியும் என்று வேத வசனங்கள் கூறுகிறது.

இது குறித்து யோவான் அப்போஸ்தலனைக் கொண்டு ஆவியானவர் வெளிப்படுத்துவதைக் கவனியுங்கள். " *பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போ மென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்* " (1 யோவான் 3:2). தேவனுடைய பிள்ளைகள் மறுமையிலே அவரைத் தரிசிக்க முடியும். அதாவது, தேவனுடைய பிள்ளைகள் மாத்திரமே மறுமையில் அவரைத் தரிசிக்க முடியும். வேத வசனங்களின்படி தேவனுடைய பிள்ளைகளுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களுள் இது மகத்தானது.


அப்படியானால், அருமையானவர்களே, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோமா இல்லையா என்று சோதித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும். தேவனை நம்புகிற பெற்றோர்களுக்குப் பிறப்ப தால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகிவிட முடியாது. சமுதாயம் ஏற்றுக்கொள்ளும் ஒரு கிறிஸ்தவப் பெயரைச் சூட்டிக் கொள்வதால் நாம் தேவனுடைய பிள்ளைகளாகி விட முடியாது. இன்னும், நாம் வாரம்தோறும் ஆராதனைக்குப் போவதாலோ, தினந்தோறும் நாம் வேதம் வாசித்து ஜெபிப்பதாலோ, நிறைய காணிக்கை தருவதாலோ, தேவக் காரியங்களில் நம்மை அவ்வப்போது ஈடுபடுத்துவதாலோ நாம் தேவனுடைய பிள்ளைகளாகி விட முடியாது. அப்போஸ்தலன் பவுலடியார் புத்தியில்லாத கலாத்தியருக்கு எழுதின போது, " *நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே* " என்றார் (கலா. 3:26).

அப். 15:9 ல் பேதுரு, விசுவாசத்தினால் இருதயம் சுத்தமாகிறது என்று கூறுகிறார். இங்கே கலா. 3:26ல், பவுல், விசுவாசத்தினால் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம் என்று சொல்லுகிறார். ஆக, " இருதய சுத்தத்திற்கும் ", " தேவனுடைய பிள்ளைகளாக மாறு வதற்கும் " அடிப்படையாக விசுவாசம் உள்ளது. மீண்டும் சொல்லு கிறேன், இங்கே, விசுவாசம் என்பது சுவிசேஷத்தைக் குறிக்கும் வார்த்தை. ஆகவே, ஒருவன் கிறிஸ்துவின் நற்செய்திக்கு, அதன் உபதேசத்தினடிப்படையில் கீழ்ப்படியும்போது, இருதயம் சுத்தமாகி, ஒருவன் தேவனுடைய பிள்ளையாகிறான். அப்படிப்பட்டவர்கள் தேவனை இம்மையிலும், மறுமையிலும் தரிசிக்க முடியும். அப்படிப் பட்ட ஆசீர்வாதங்களுக்குச் சொந்தமானவர்களாய் நாம் ஒவ்வொரு வரும் மாற தேவன் நமக்கு வழி வகைகளைத் தம் வார்த்தைகளில் கொடுத்துள்ளார்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும் தேவனைத் தரிசிக்கும் பாக்கியம் பெற நம்மைச் சமூலமாய் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுப் போமாக! ஆமென்.

✝

# ஏன் கிறிஸ்தவம் மிகவும் வித்தியாசமானது?



Bro. J.C. சோட்

கிறிஸ்தவம் உலகெங்கிலும் காணப்படுகிறது. கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் கோடிக்கணக்கான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் செய்தியை எடுத்துச் செல்வதால் அதன் எண்ணிக்கை தொடர்ந்து பெருகிக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்தவம் என்பது, கிறிஸ்துவை ஒரு மனிதன் என்றோ, மற்றுமொரு பரிசுத்தவான் என்றோ அல்லது இன்னொரு தீர்க்கதரிசி என்றோ விசுவாசிப்பதை அடிப்படையாக் கொண்டிராமல், கிறிஸ்தவம் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்றும், உலகத்தின் பாவத்திற்காக மரித்தவரென்றும், என்றென்றும் ஜீவிக்கும்படியாக கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவரென்றும் விசுவாசிப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும். பேதுருவும், அப்போஸ்தலர்களும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டார்கள் (மத். 16:16-18). பரலோகத்திலிருந்து தேவனும், கிறிஸ்துவை தம்முடைய குமாரன் என்று அறிவித்தார் (மத். 17:5).

இன்று உலகத்தில், ஓர் உயிருள்ள தலைவரைக் கொண்டிருக்கும் ஒரே மதம் கிறிஸ்தவம் தான். மற்ற மதங்களின் தலைவர்கள் மரித்தார்கள். ஆனால், மறுபடியும் உயிர்த்தெழவில்லை. ஆனால், கிறிஸ்து தாம் உயிர்த்தெழப்போவதாகச் சொன்னார். அதைச் செய்து காட்டினார் (யோவான் 11:25; மத். 28:1-6). அவர் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமல் இருந்திருந்தால் அவர் ஒரு பொய்யனாகவோ, வஞ்சகனாகவோ இருந்திருப்பார். அவர் உயிர்த்தெழவில்லையென்றால் கிறிஸ்தவம் ஒரு போதும் வளர்ந்திருக்காது. ஆனால், கிறிஸ்தவம் வாழ்கிறது, சபை வாழ்கிறது, பொதுவான உயிர்த்தெழுதலின் நம்பிக்கை வாழ்கிறது. இவைகள் எல்லாமே கிறிஸ்து வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் நடக்கிறது.

கிறிஸ்தவம் ஒரு மிகப் புகழ்பெற்ற மார்க்கமாயிருக்கிறது. மற்றெந்த மதம் அல்லது நம்பிக்கையைவிட, நன்மைக்கேதுவாக இந்த உலகை மாற்றுவதற்கு அதிகமாகச் செய்திருக்கிறது; சர்வதேச நாள்காட்டிகள் கிறிஸ்துவின் வாழ்க்கையையும், மரணத்தையும் அடிப்படையாக வைத்தே நாட்களைக் குறிக்கிறது, கிறிஸ்துவின் ஒழுக்க ரீதியிலான போதனைகளை ஆதாரமாக வைத்தே தேசங்களின் சட்டங்கள் பிரதானமாக இயற்றப்பட்டிருக்கின்றன. பெரும்பாலான நாடுகள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை அங்கீகரிக்கின்றன. நிச்சயமாக, இது கிறிஸ்தவத்திலிருந்து வந்தது தான்; அதாவது,

இது கிறிஸ்து வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார், மற்றும் கர்த்தர் தம்மை நினைவு கூரும்படியாகவும், தேவனை ஆராதிக்கும்படியாகவும் வாரத்தின் முதல் நாளிலே கூடி வர வேண்டுமென்று கட்டளையிட்டதையும் அடிப்படையாக வைத்து அமைந்தது தான் (மத். *28:1-6* ; அப். *20:7*).

கிறிஸ்தவம் என்பது ஒரு மார்க்கம். அதன் பொருள் தேவனுக்கும், மனிதனுக்கும் ஆற்றப்படும் சேவை. யாக்கோபு இவ்விதமாகச் சொன்னார். "*திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது* " என்று (யாக்கோபு 1:27). இங்கே திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரிப்பது என்பது வெறுமனே வெறும் வாயில் விசாரிப்பது என்று பொருள்படாமல், இப்படிப்பட்டவர்களின் தேவைகளைச் சந்திப்பதில் அக்கறை காட்டுவதாகும். கிறிஸ்தவர்கள் தங்களால் முடிந்தவரை மற்றவர்களுடைய தேவைகளை சந்திப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே தான் பவுல், "*ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்*" என்று சொல்கிறார் (கலாத். 6:2).

கிறிஸ்தவம், கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லா விசுவாசிகளும் ஒற்றுமையாயிருப்பதையும் (I கொரி. *1:10*), கிறிஸ்துவுக்குள் எல்லாரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்பதையும் ஆதரிக்கிறது. பவுல் இவ்விதமாக எழுதினார், "*நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டார்களே யூதனென்றும், கிரேக்க னென்றும் இல்லை, அடிமையென்றும், சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும், பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்*" என்று (கலா. *3:26-28*).

ஒருவர் கர்த்தருடைய குடும்பத்தில் சரீரப்பிரகாரமாகப் பிறக்க முடியாது. கிறிஸ்தவம் சரீரப்பிரகாரமான பிறப்பினால் வளர்வதில்லை. ஆனால், ஆவிக்குரிய பிறப்பின் மூலமாக வளர்கிறது (யோவான் *3:3-5*). வேறுவிதமாகச் சொன்னால், கர்த்தர் தம்முடைய சீஷர்களை ஜனங்களிடத்தில் தம்மைப்பற்றி போதிக்கவும், அவர்களிடத்தில் காரண காரியங்களோடு அவரைப்பற்றி எடுத்துரைக்கவும், கிறிஸ்துவை விசுவாசித்து, அவருக்குக் கீழ்ப்படியவும், அதன் மூலம் அவரால் இரட்சிக்கப்படவும், தேவனுடைய பிள்ளைகளாகும்படி ஜனங்களை சம்மதிக்கச் செய்யவும் அனுப்பினார். "*விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்*" என்று பவுல் நமக்கு நினைப்பூட்டுகிறார் (ரோமர் *10:17*). எபிரெய எழுத்தாளர், "*விசுவாசம் இல்லாமல்தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்*" என்றும் சொல்கிறார். மீண்டுமாக எபிரெய எழுத்தாளர், கிறிஸ்துவையும், அவருடையவர்களாகப் போகிறவர்களையும் குறித்து, "*அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக்*

*கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமாக* " என்று உரைக் கிறார் (எபி. 5:8,9). அதன் பொருள், குழந்தைகள் அல்லது சிறு பிள்ளைகள் கிறிஸ்தவர்களாக அல்லது சபையின் அங்கத்தினர்களாக முடியாது. அவர்கள் நன்மை, தீமை இன்னதென்று அறிந்துகொள்ளும்படியாகவும், கிறிஸ்துவின் உபதேசங்களை கேட்கும்படியாகவும், கிறிஸ்துவை விசுவாசித்து அவருக்குக் கீழ்ப்படிவதா, கீழ்ப்படிவதில்லையா என்பதை அவர்களே முடிவெடுக்கத் தக்கதாகவும் வளர வேண்டும்.

கிறிஸ்தவம், கடைசியாக எல்லோரும் உயிரோடு எழுந்திருப்பார்கள் என்றும், எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு இருக்குமென்றும், எல்லோரும் தங்கள் நித்தியத்தை பரலோகத்தில் அல்லது நரகத்தில் கழிப்பார்கள் என்றும் போதிக்கிறது. கிறிஸ்து, " *இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம்; ஏனென்றால், பிரேதக் குழிகளிலுள்ளவர்கள் அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம் வரும்; அப்பொழுது, நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்* ". என்றார் (யோவான் 5:28,29). நாம் இதையும் வாசிக்கிறோம், " *அன்றியும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே* " என்று (எபி. 9:27) பவுல், " *ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்* " என அறிவிக்கிறார் (II கொரி. 5:10). நியாயத்தீர்ப்பு நடந்தேறிய பிறகு துன்மார்க்கர் நித்திய ஆக்கினையை அடைவார்கள், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடைவார்கள் (மத். 25:46).

கிறிஸ்தவம் எதிர்க்கின்ற காரியங்களும் உண்டு. கிறிஸ்தவம் சாத்தானை, இந்த உலகத்தை, மாம்சத்தின் கிரியைகளை எதிர்க்கிறது (I யோவான் 2:15-17; கலா. 5:19-21). குறிப்பாக, கிறிஸ்தவம் போர், லஞ்சம், புகைபிடித்தல், சூதாட்டம், மதுபானம் குடித்தல், போதை மருந்துக்களை பயன்படுத்துதல், கருக்கலைப்பு, ஆண்புணர்ச்சி என்று இன்னும் இப்படிப் பட்டவைகளுக்கு எதிரானது. கிறிஸ்தவம், ஜாதிமுறை, விக்கிரக ஆராதனை, பொய்யான மதங்கள், மனிதர்களுக்கு முன்பாகத் தங்களைத் தெய்வங்களாக உயர்த்துவது போன்றவைகளை நிராகரிக்கிறது. கிறிஸ்தவம், மறு அவதாரத்தை நம்புவதில்லை. கிறிஸ்தவம் அதன் அங்கத்தினர்கள் மாம்சம் புசிப்பதைத் தடை செய்வதில்லை. சில மக்கள் விவாகம் செய்வதைத் தடை செய்வதையும், மாம்சம் புசிப்பதிலிருந்து விலகியிருக்கும்படி கட்டளை யிடுவதையும் குறித்து பவுல் இப்படியாகச் சொல்கிறார். " *விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத் தோடே அனுபவிக்கும்படி தேவன் படைத்த போஜனபதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படதக்கதல்ல. அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்* " (I தீமோ. 4:2-5).

தேவனுடைய வார்த்தையில் சொல்லப்படாத கிறிஸ்தவத்தின் எல்லா கொள்கை, கோட்பாடுகளையும் நாங்கள் எதிர்க்கிறோம். வேறு

விதமாகச் சொன்னால், கிறிஸ்தவம் என்று உலகத்தால் அதிகமாகப் பார்க்கப்படுகிற கிறிஸ்தவம் ஒரு தவறான கிறிஸ்தவமாகும். இதன் காரணமாக, உண்மையான கிறிஸ்தவத்திற்கு கெட்ட பெயர் வருகிறது. கிறிஸ்தவர்கள் சண்டைபோடுகிறதை நாம் கேட்கிறோம், கிறிஸ்தவர்கள் தவறான, கெட்ட காரியங்களைச் செய்கிறதை நாம் கேள்விப்படுகிறோம். மறுபடியும், இது உண்மையான கிறிஸ்தவத்தை வெளிப்படுத்துகிறதில்லை. வேதாகமத்தின் கிறிஸ்தவம், இவைகளை நடைமுறைப்படுத்துகிறவர்கள் செய்கின்ற நல்ல காரியங்களினால் மட்டும் அறியப்பட்டு இந்த உலகத்தை வாழ்வதற்கு ஏற்ற ஒரு சிறந்த இடமாக மாற்றுகிறது. ஆகவே, தேவனுடைய வார்த்தை மனிதனால் உண்டாக்கப்பட்ட போலி கிறிஸ்தவம் மற்றும் பிரிவினைச் சபைகள் இவைகளுக்கு விரோதமாகப் போதிக்கிறது.

நாங்கள் இந்த உலகத்தின் மதங்களிலோ அல்லது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ளுகிற மனிதர்களுடைய பிரிவினைச் சபைகளிலோ நம்பிக்கைக் கொள்வதில்லை. ஆனால், மார்க்க சுதந்திரத்தில் நம்பிக்கை வைக்கிறோம். தேவனே, இந்த உலகத்தின் தவறான மதங்களை அங்கீகரிப்பதில்லை. ஆனால், மெய்யான தேவனை ஆராதிப்பதா அல்லது எதிர்ப்பதா என தீர்மானம் எடுப்பதை ஒவ்வொரு தனி நபரிடமே விட்டு விடுகிறார். தன்னுடைய மதத்தை மற்றவர்கள் மீது திணிக்கும் உரிமை எந்த மனிதனுக்கும் கிடையாது. மனிதன், தான் விரும்புகிறபடி தன் ஆத்தும காரியத்தில் சுதந்திரமாகச் செயல்பட முடியாத நிலையில், அவன் உண்மையாகவே சுதந்திரமாக இருக்கிறான் என்று சொல்ல முடியாது. தேவனுடைய வார்த்தை தான், மனிதனை தேவனுக்கு அறிமுகப்படுத்தி, அவன் தன் பாவங்களிலிருந்து எப்படி விடுதலை பெற முடியும் என்று சொல்கிறபடியால், மெய்யான விடுதலை தேவனுடைய வார்த்தையில் தான் இருக்கிறது (யோவான் *8:32*).

நீங்கள் எந்த மதத்தை ஏற்று நடைமுறைப்படுத்துகிறீர்கள்? நீங்கள் ஏன் நடைமுறைப்படுத்துகிறீர்கள்? சரீரப்பிரகாரமாக அந்த மதத்தில் பிறந்தீர்களா? அல்லது போதனையின் விளைவாக அதை ஏற்றுக்கொண்டு, இது ஒன்றான மெய்யான வழியை அடையாளப்படுத்துகிறது என்பதை நம்பத் தொடங்கினீர்களா?

உங்கள் மதம் அர்த்தமுள்ளதாக இருக்கிறதா? இன்று உலகம் இருக்கிறது போல உங்கள் மதம் நவீனமாயிருக்கிறதா? அல்லது பழங்கால முறைமைகளின்படி வாழ உங்களை அது அழைத்துச் செல்கிறதா பகுத்தறிவினடிப்படையிலான, அர்த்தமுள்ள காரியங்களை அது உங்களிடமிருந்து எதிர்பார்க்கிறதா? அல்லது உங்களை முட்டாளாக்கி தர்க்க வாதத்திற்கு ஒத்துவராத காரியங்களைச் செய்யும்படி உங்களை வழி நடத்துகிறதா?

ஜனங்கள் வாசிக்கவும், படிக்கவும், சுயமாக முடிவு எடுக்கும்படியான வாய்ப்பு இருக்கும் வரை கிறிஸ்தவத்தில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. கிறிஸ்தவம் தர்க்கரீதியானது, அர்த்தமுள்ளது என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். மேலுமாக, கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களையும், விசுவாசியாதவர்களையும் பாருங்கள்; கிறிஸ்தவம் அவர்களுக்கு என்ன செய்து கொண்டிருக்கிறது என்று பாருங்கள். கிறிஸ்தவம் அதன் முழு போதனையின்படி கைக்

கொள்ளப்படும்போது, ஜனங்களிடத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி, ஜனங்களை ஆவிக்குரிய பிரகாரமாக சிறந்த வாழ்க்கை வாழ வழி நடத்து கிறது. கிறிஸ்தவர்கள் இப்பூமியில் தாங்கள் வாழ்வதற்கான அர்த்தமுள்ள காரணங்கள் இருப்பதாலும், மரணத்திற்குப் பின்னான வாழ்க்கையை எதிர் நோக்கும் எல்லா முகாந்திரமும் இருப்பதாலும் அவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியுள்ள மக்களாக இருக்கிறார்கள்.

நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளாதவராக இருந்தால், கிறிஸ்தவத்தை கவனித்துப் பார்க்கும்படியாக நான் உங்களை ஊக்கப் படுத்துகிறேன். வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டுப் பகுதியில் இது குறித்து வாசியுங்கள். உங்களுக்கு மனமிருந்தால், நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக மாற விரும்புவீர்கள் என்று நான் நம்புகிறேன். மேலும், தேவனையும், தேவனுடைய குமாரனென்று கிறிஸ்துவை விசுவாசிப்பதாலும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவதினாலும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று உங்கள் வாயினால் அறிக்கை பண்ணுவதாலும், உங்கள் பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெறுவதினாலும் நீங்கள் கிறிஸ்தவராக முடியும் (எபி. *11:6*; யோவான் *14:1-3*; அப். *2:38*). இதை நீங்கள் செய்யும்போது, கர்த்தர் உங்களை இரட்சித்து, தம்முடைய சபையில் சேர்த்துக்கொள்வார். அதன் மூலம் நீங்கள் கிறிஸ்தவராகவும், கிறிஸ்தவத்தின் ஒரு அங்கமாகவும் இருப்பீர்கள் (அப். *2:47*; *1* பேதுரு *4:16*). இது மிகவும் சுலபமான ஒன்றாகத் தெரியவில்லையா? இப்படிச் செய்வது மிகவும் சுலபமானதும், எவ்வித சிக்கலுமற்றது. கிறிஸ்துவின் போதனைகளினடிப்படையில் செய்யும்படி உங்களை ஒப்புக்கொடுக்கத் தயவு செய்து தவறி விடாதீர்கள். ✝

## நாளும், நடப்பும்

1. தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து பிரதமர் காமன்வெல்த் மாநாட்டில் பங்கேற்கவில்லை - வெளியுறவுத் துறை அமைச்சர்.
2. “ ஹையான் ” புயலால் பிலிப்பின்ஸில் 10,000 பேர் சாவு
3. மானிய சிலிண்டர்கள் எண்ணிக்கை குறைக்கப்படாது - பெட்ரோலியத் துறை இணை அமைச்சர்
4. தமிழகத்துக்கு 26 டி.எம்.சி. நீர் - காவிரி மேற்பார்வைக்கு உத்தரவு.
5. சென்னையில் மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் வெற்றி.
6. செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய இந்தியா “ மங்கல்யாண் ” விண்கலத்தை வெற்றிகரமாகச் செலுத்தியது.
7. உலக செஸ் போட்டி : விஸ்வநாதன் ஆனந்த் மற்றும் கார்ல்ஸென் மோதல்

பெண்கள் பகுதி

# உலகை தலைகீழாக மாற்றியவர்கள் அல்லது கலக்கியவர்கள்

**RR NAYAGAM**

அன்பான சகோதரிகளே! கர்த்தரும், அருமை இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அன்பான வாழ்த்துக்கள். இம்மாத தலைப்பைப் பார்க்கும்போது " உலகைக் கலக்கியவர்கள் " என்றால் என்ன, அதன் அர்த்தம் என்ன, ஏன் இவ்வாறு அழைக்கப்பட்டார்கள் என்றெல்லாம் யோசிக்கிறோம். பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேத வார்த்தைகள் ஒவ்வொன்றும் அர்த்தமுள்ளவைகள். ஆராய்ந்து படிக்கும்போது நிச்சயம் அதின் காரண காரியங்களை ஒருவரால் புரிந்து கொள்ள முடியும்.

அருமையானவர்களே, நம்மில் எத்தனை பேர் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை ஒருமுறை உட்கார்ந்து தொடர்ச்சியாக படித்திருக்கிறோம்? முயற்சித்துப் படித்தால் அப்படியே ஆச்சரியப் பட்டு வியந்து விடுவோம். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் சரித்திரம் அப்படியே சிந்தரிக்கப்பட்டு, சபையின் அமோக வளர்ச்சியை அங்கே பார்க்க முடியும். அப்போஸ்தலர் 17ம் அதிகாரம் 6ம் வசனத்தில் " உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக் கிறார்கள் " என்ற வார்த்தைகளை வாசிக்க முடியும். இப்புத்தகத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் அவர்களுடைய அந்த இருதயத்தை ஊடுருவி, நொறுக்கக்கூடிய உறுதியான விசுவாசம், முழுமையான ஒப்புக்கொடுத்தல், தியாக வாழ்வு இவைகள் தான் உலகைக் கலக்கியது.

முதல் சகோதர, சகோதரிகளின் இந்த உறுதியான விசுவாச மானது மிகவும் முக்கியம். அச்சுறுத்தல் வரும்போது அவர்கள் விசுவாசம் பெருகும். சோர்ந்து போகவோ, காரணம் பேசவோ இல்லாமல் தொடர்ந்து கிறிஸ்து தான் முக்கியம். அவர் சபைக்காகப் பாடுபடுவோம் என்ற எண்ணம் தான் அவர்களுக்கு மேலோங்கி இருந்தது. மருத்துவராகிய லூக்கா குறிப்பிடும்போது " *திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகி* " (5:14) என்கிறார்.

மேலும் " புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக் கொண்டு போய், காவலில் போடுவித்து " *(8:3)* என்றும், பிலிப்பு பிரசங்கிதத்தை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும், ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (8:12) என்றும் வாசிக்கிறோம். ஸ்திரீகளும், புருஷரும் இப்படித் தங்கள் விசுவாசத்தில் உறுதியாயிருந்ததற்கு காரணம் தான் என்ன? " இயேசுவின் உயிர்த்தெழுதல் " அவர்கள் விசுவாசத்திற்கு இன்னும் கொஞ்சம் வெளிச்சத்தைக் கொடுத்தது.

" இந்த இயேசுவை தேவன் எழுப்பினார் " "இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம் " (2:32) என்று சொன்னார்கள். யோவான் 20:19,20ம் வசனங்களில், தாம் உயிர்த்தெழுந்த அதே நாளில் தம் சீஷர்களுக்கு தரிசனமாகி தம்மை காண்பித்ததினால் அதைக் கண்டு சீஷர்கள் சந்தோஷப்பட்டார்கள். மேலும், சீஷர்கள் தவிர வேறு அநேகருக்கும் தரிசனமானதை லூக்கா பதிவு செய்துள்ளார் (3:15,4; 33,5:32; மத். 10:39,42; 13:30,31). மேலும், அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரி. 15:3,8ல் யார், யாருக்கெல்லாம் தரிசனமானார் என்று கூறுகிறார். எனவே, அவர் உயிர்த்தெழுந்து விட்டார் என்ற அதிசயமான செய்தி முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களுக்கு உறுதியான விசுவாசத்தைக் கொடுத்தது. ஒருவர் ஒன்றைக் கண்ணால் பார்த்து விட்டால் அதை விட சாட்சி வேறொன்றும் இருந்துவிட முடியாது. யாரும் இல்லை என்று மறுதலித்து விடமுடியாது. எனவே தான் பேதுரு, யோவான், யாக்கோபு போன்றவர்கள் ஜெப ஆலயங்களில் நின்று பேசியபோது அநேகர் தங்கள் இருதயத்தில் தொடப்பட்டனர். ஏனென்றால், உண்மையை கண்டவர்கள் உண்மையை உறுதியாய்ப் பேசினார்கள்.

அருமையான சகோதரிகளே! ஒருவேளை இயேசுவின் உயிர்த்தெழுலை நம் சொந்தக் கண்களால் பார்க்காவிட்டாலும் வேதாகமத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டவைகள் நமக்கு சாட்சிகளாய் இருக்கிறது. நாம் அதை விசுவாசித்து, அதின்படி வாழ்ந்து பிறருக்கு அறிவிக்க வேண்டும். உலகத்தில் நடப்பவைகள் அனைத்தையும் நம் கண்களால் பார்க்காமல் செய்திகளின் மூலம் நம்புகிறோம். இயேசுவின் வாழ்க்கை, அவரின் மரணம் அவரின் உயிர்த்தெழுதல் இம்மூன்றையும் விட முக்கியமானவை உலகில் எதுவுமே இல்லை.

இரண்டாவது, நம்முடைய விசுவாசம் நம் எலும்புகளில் இருக்க வேண்டும். எரேமியா தீர்க்கன் மிகவும் மனம் ஒடிந்துபோய் தான் இனி கர்த்தருடைய நாமத்தின் மேல் பேசாமல் இருப்பேன் என்ற முடிவுக்கு வந்தபோது, " ஆனாலும் அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப்போல் என் இருதயத்தில் இருந்தது" (எரே. 20:9) என்று கூறுகிறார். முதல் நூற்றாண்டில் பேதுருவையும், யோவானையும் இயேசுவைக் குறித்து பேசக்கூடாது என்று சொன்னபோது, நாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் பேசாமலிருக்கக் கூடாதே " (4:20) என்றார்கள். காரணம், அவர்கள் விசுவாசம் அவர்கள் உயிரை விட மேலாய் அவர்களுக்குள் இருந்தது.

பேதுரு சிறையில் இருக்கும் அந்தப் பயங்கரமான, ஆபத்தான சூழ்நிலையில் ஏன் யோவான் மாற்குவின் தாயாகிய மரியாள் தன் வீட்டில் ஜெபம் செய்யக் கொடுத்தாள்? தமஸ்குவிலிருந்த ஸ்திரீகள் சவுலால் துன்பப்படுத்தப்பட்டபோது சகித்தார்களே ஏன்? அதே சவுல் பவுலாக மாறி அடி, உதை, கல்லெறியுண்டல், சிறையில் அடைபட்டல்,

கப்பற்சேதம் போன்ற பாடுகளோடு சரீரத்திலும் பெலவீனமாய் இருந்த போது கொஞ்சம்கூட பயப்படாமல், சந்தேகப்படாமல் விசுவாசத்தோடு தன் இளம் மகனாகிய தீமோத்துவை பவுலடியாரோடு ஊழியத்துக்கு அனுப்பி கொடுத்தார்களே தாயாகிய ஐனிக்கேயாள் ஏன்? அவர்கள் எலும்புகளில் காணப்பட்ட விசுவாசம் தான். எப்படியாவது சுவிசேஷம் பரப்பப்பட வேண்டும் என்று தீராத ஆவல் தான்.

மூன்றாவது, முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் இந்த அவசரமான விசுவாசத்திற்கு காரணம் தான் என்ன? தங்களால் நேசிக்கப்பட்ட உயிர்த்தெழுந்த இயேசு மீண்டும் வருவார் என்று சொல்லிச் சென்றாரே. அவரைப் பார்க்க வேண்டும். அவரோடு மீண்டும் வாழ வேண்டும் என்ற எதிர்பார்ப்பும், ஆவலும் தான். இயேசுவைப் பார்த்தவர்களும், அவர்களால் கேள்விப்பட்டவர்களும் தங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார்கள்.

அருமையானவர்களே இன்றைக்கு வாழும் நாம் விசுவாசம் எவ்வளவு முக்கியம் என்று அறிந்து கொள்ள வேண்டும். உயிர்த்தெழுந்த இயேசு பற்றி நாம் வாசிக்கிறோம். மீண்டும் வருவார் என்று நம்புகிறோமா? அப்படியானால் உறுதியான, உயிருள்ள, அவசரமான விசுவாசம் நம்மிடையே காணப்படுகிறதா? அப்படி இருந்தால்தானே அவருக்காக நாம் பேச முடியும், அவருடைய சபைக்காக ஆத்துமாக்களை சம்பாதிக்க முடியும். முதல் நூற்றாண்டு புருஷர், ஸ்திரீகளைப் போல உலகத்தை மாற்ற முடியும்?

கர்த்தருக்கு சித்தமானால் வேறு என்னென்ன காரியங்கள் அவர்களுக்குள் இருந்தன என்று வரப்போகிற மாதத்தில் பார்க்கலாம். நாமும் பரலோகம் போகலாம். மற்றவர்களையும் அழைத்துச் செல்லலாம். ஆமென்.

✝

## ஆவிக்குரிய மனிதனின் செயல்பாடுகள்

1. அவன் வாழ்க்கையில் தேவனுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறான் (மத். 6:33)
2. அவன் தேவனைப் பற்றியும் தன் வாழ்க்கை மீதான தேவனுடைய சித்தத்தையும் நன்றாக அறிகிறான் (யோவான் 17:3)
3. அவன் மேலானவைகளை நாடுகிறவனாக இருக்கிறான் (கொலோ. 3:1,2)
4. அவன் ஆவியின் கனியைக் கொடுப்பதற்கு பிரயாசப்படுகிறான் (கலா. 5:22,26)
5. அவன் இப்பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரிப்பதில்லை (ரோமர் 12:2)

# ஊழியத்திற்கேற்ற உத்தம குணங்கள்

**Bro. Benny Martin**

அருமையான வாலிப உள்ளங்களே! உங்கள் யாவரையும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவுக்கும், கிறிஸ்தவனுக்கும் உள்ள உறவானது ஒரு எஜமானுக்கும், அடிமைக்கும் உள்ள உறவாக, உருவக பாணியில் விவரிக்கப்பட்டிருக்கிறது. பவுல் பெரும்பாலும் தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் அல்லது அடிமையென்று காட்டுகிறார் (ரோமர் 1:1; கலாத். 1:10). வாலிபர்களாகிய நம்மில் சிலர் முழுநேர ஊழியம் செய்கிறோம். இன்னும் சிலர், உலகப்பிரகாரமான வேலை செய்து கொண்டு ஊழியம் செய்கிறோம். இன்னும் ஒரு சிலர், கிறிஸ்துவின் சபையில் விசுவாசிகளாயிருக்கிறோம். எப்படியாயினும் வாலிபர் களாகிய நாம் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறோம். " உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங் கியுங்கள் " என்று இயேசு அப்போஸ்தலர்களுக்கு மாத்திரம் கட்டளை கொடுக்கவில்லை, அந்த கட்டளை எல்லா கிறிஸ்தவர்களுக்கும் பொருந்தும், அதிலும் குறிப்பாக, இந்தக் காரியத்தில் வாலிபர்களின் பங்கு அதிகமாக இருக்கிறது. இப்படி நாம் சுவிசேஷத்தைப் பிரசங் கித்து, ஆத்துமாக்களை ஆதாயம் செய்யாவிட்டால் நாம் வெறுங்கை யோடு கர்த்தரை சந்திக்க வேண்டியதாயிருக்கும். இந்த உலகத்தில் எத்தனையோ வாலிபர்கள் தவறான பழக்கவழக்கங்களினால் அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆத்துமாவில் மரித்துப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் ஆத்தும பாரம் உடையவர்களாயிருக்க வேண்டும். அவர்களை நாம் தேவனிடத்தில் திருப்பும் போது தேவன் அதில் பிரியமாயிருப்பார். நாம் நம் எஜமானாகிய கிறிஸ்துவின் அடிமைகளாயிருக்கிறோம். பழங் காலத்தில் அடிமைகள் தங்கள் எஜமான்களுடைய பெயரால் குறிக்கப் பட்டார்கள். அவர்கள் எந்த எஜமானுடையவர்கள் என்பதை அடையாளம் காட்டுவதற்காக அப்படி முத்திரையிடப்படுவார்கள்.

ஆனால், நாம் கிறிஸ்துவுக்கு அடிமைகளாயிருப்பது வற்புறுத்தலினாலோ அல்லது கட்டாயத்தினாலோ அல்ல. அது நாம் மனப்பூர்வமாய் இயேசுவை நம்முடைய எஜமானாக ஏற்றுக் கொள்வ தாகும். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்குச் சொல்லும் போது " மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக் கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும் எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே

கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா?" என்று கேட்கிறார் (ரோமர் 6:16). இயேசு ஒரு போதும் தம்மைப் பின்பற்ற வேண்டும் என்று யாரையும் வற்புறுத்துவதில்லை. அதைப் பற்றி இயேசு சொல்லும் போது " ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அதன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன் " என்றே சொன்னார் (மத். 16:24). மேலும், இயேசு யோவான் 8:34ல் சொல்லும்போது, "பாவஞ் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான் " என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். வாலிபர்களாகிய நாம் தேவனுக்கு அடிமைகளாயிருப்பதால் நல்ல அடிமைகளாக எப்படி இருப்பது என்பதை கற்றுக்கொள்ள வேண்டும். ஏனென்றால், நல்ல வேலையாட்களே பலனளிக்கப்படு வார்கள். சரி, புதிய ஏற்பாடு நல்ல வேலையாட்களாக எப்படி இருப்பது என்பது பற்றி என்ன கூறுகிறது? கீழ்க்காணும் குணாதிசயங் களை ஒரு வேலைக்காரன் பெற்றிருந்தால் நல்ல வேலைக்காரனாக அவனால் திகழ முடியும்.

## I கீழ்ப்படிதல்

இதுதான் ஒரு நல்ல வேலைக்காரனின் முதன்மையான கடமை யாகும். கீழ்ப்படிதல் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். பவுல் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு சொல்லும் போது " முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும் இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப் பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம், பாவத் தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் என்று " (ரோமர் 6:17,18). பேதுரு இதை சத்தியத்திற்குக் கீழ்ப்படி கிறதாக்ச் சொல்கிறார் (1பேதுரு 1:22,23). நம்முடைய அருமை இரட்சகர் இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் பிதாவுக்கு எல்லா விதத்திலும் கீழ்ப்படிந்தார். அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலை கற்றுக்கொண்டார். மேலும், ஒரு நல்ல வேலைக்காரன் தன்னுடைய எஜமானுடைய எல்லாக் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிகிறான். எனவே, கிறிஸ்துவின் நல்ல வேலைக்காரர்கள் சபை கூடிவருதலை விட்டு விடக்கூடாது என்ற கட்டளைக்குக் கீழ்ப்படிகிறார்கள் (எபி. 10:25); வாரத்தின் முதல் நாள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற வேண்டும் (அப். 20:7); வாரத்தின் முதல் நாள் தன் மனதில் நியமித்தபடியே கர்த்தருக்குக் கொடுக்க வேண்டும் (I கொரி. 16:12; II கொரி. 9:7) அதுமாத்திரமல்ல, முழு உலகத்திற்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்ற கட்டளைக்கும் கீழ்ப்படிய வேண்டும் (மத். 28:19,20; மாற்கு 16: 15,16). மேற்கூறிய

காரியங்களை நாம் செய்யாமல் எப்படி அவருடைய வேலைக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியும்?

### II ஜாக்கிரதை

ஒரு நல்ல வேலைக்காரன் தன்னுடைய எஜமானுடைய சித்தம் அல்லது விருப்பம் என்ன என்பதை அறிந்து கொள்ள ஆசையாயிருக்கிறான். இந்தக் காரணத்திற்காக அவன் வேதாகமத்தின் நல்ல மாணவனாயிருக்கிறான். பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லும்போது, " நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு " என்று அறிவுறுத்துகிறார் (II தீமோ. *2:15*). ஒரு நல்ல வேலைக்காரன், அவருடைய சேவையில் ஜாக்கிரதையாயிருந்து, ஆவியிலே அனலாயிருந்து; கர்த்தருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும் என்று பவுல் சொல்கிறார். நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதை மிக அவசியமானதாகும் (எபி. *4:1,11*). சோம்பேறியான வேலைக்காரர்கள் புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள் (மத். *25:26,30*). நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பேதுரு சொல்லும் போது, "ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் (மேற்கூறப்பட்ட கிருபைகளை) நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை " (II பேதுரு *1:10*) என்கிறார்.

### III தைரியம்


மோசே நாற்பது வருடங்களாக தேவனுடைய வேலைக்காரனாக இருந்த பிறகு, அதாவது, மோசேயின் மரணத்திற்குப் பிறகு தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தும்படி யோசுவாவைத் தெரிந்து கொண்டு பலங்கொண்டு திடமனதாயிரு என்று சொல்லி யோசுவாவைத் தைரியப்படுத்தினார் (யோசுவா *1:6*). மேலும், பேதுரு கிறிஸ்தவர்களை தங்கள் விசுவாசத்தோடு தைரியத்தை கூட்டி வழங்குங்கள் என்று புத்திமதி சொல்கிறார் (II பேதுரு *1:5*). பேதுருவும், யோவானும் இயேசுவின் நாமத்தைக் குறித்து எவ்வளவும் பேசவும், போதிக்கவும் கூடாதென்று கட்டளையிடப்பட்டார்கள். ஆனால், அதற்குப் பேதுருவும், யோவானும் பயப்படாமல் இயேசுவின் நாமத்தைக் குறித்து தைரியமாய்ப் பேசினார்கள். ஓர் இராணுவ வீரன் எப்படி தன்னுடைய தளபதியின் கட்டளையின்படி செயல்படுவானோ அதுபோல நாம் நம்முடைய தளபதியாகிய கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். அப்படிச் செய்ய அந்த வீரனுக்கு எப்படி துணிச்சலும், தைரியமும் தேவைப்படுகிறதோ அதேபோல நமக்கும் அந்த துணிச்சலும், தைரியமும் தேவை.

## IV அர்ப்பணிப்பு

பழங்கால இஸ்ரவேல் தேசத்தில் வேலைக்காரன் ஒருவன் தன்னுடைய எஜமானை விட்டுப் பிரிய மனதில்லாதிருந்தால் அவனுடைய சரீரத்தில் நிரந்தரமாக குறி அல்லது அடையாளம் போடப்படும் (யாத். 21:1-6). அவன் தன்னுடைய சரீரத்தில் எஜமானுடைய அடையாளத்தைத் தரித்துக்கொள்ளுகிறான். அப்போஸ்தலனாகிய பவுல் தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தன்னுடைய சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறதாகச் சொல்கிறார் (கலா. 6:17). அவர் தன்னுடைய எஜமானைப் பிரியப்படுத்தவே நாடினார் (கலா. 1:10). பிரியமான வாலிபர்களே! நீங்கள் இது போன்ற குணாதிசயங்களைப் பெற்றிருக்கிறீர்களா? அவருக்கு ஊழியக்காரனாயிருப்பது என்பது ஒரு ராஜாவாக இருப்பது போன்றதாகும். பேதுரு இதுபற்றிச் சொல்லும்போது “ நீங்களோ உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள் ” என்று சொல்கிறார். நாம் முழுமையான சுதந்திரத்தை பெற ஒரே வழி அவருக்கு அடிமையாக இருப்பது தான் (யோவான் 8:36; ரோமர் 6:18,22).

ஆகையால், அன்பான வாலிபர்களே! மேலே பார்த்த கருத்துக்களின்படி நாம் உண்மையாகவே தேவனுடைய வேலைக்காரர்களாக இருக்கிறோமா என்று எண்ணிப்பார்ப்போம். வேலைக்காரர்களாக மாற தீர்மானம் எடுப்போம். ✝

## கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்



காங்கயம் கிறிஸ்துவின் சபை ஆரம்ப கால அங்கத்தினர்களில் ஒருவரும், எங்கள் குடும்பத்திற்கு மிகவும் நெருக்கமான சகோதரர்களில் முக்கியமானவருமாகிய **சகோ. பால்** அவர்கள் (வயது 73) கடந்த **24.10.2013** அன்று காலை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

– ஆசிரியர்

**சகோதரர் அவர்கள் விட்டுச் சென்ற குடும்பத்தாருக்காக ஜெபியுங்கள்.**

– ஆசிரியர்

சிறுவர் பகுதி

# வேதத்தில் உள்ள மேகங்கள்

Dr. ABEL R. NAYAGAM

இயேசு கிறிஸ்து வாழ்ந்த தேசமாகிய பாலஸ்தீனாவில், சீதோஷ்ண நிலை வருட முழுவதும் ஏறக்குறைய ஒரே மாதிரியானதாகத்தான் இருக்கும். இந்த அழகான நாடு, கிழக்கிலே பாலைவனத்தையும், மத்தியத் தரைக்கடலை மேற்கேயும் எல்லைகளாகக் கொண்டிருக்கிறது. கடலில் இருந்து வீசும் காற்று ஈரமானதாக இருப்பதால் பெரிய மேகங்களை உண்டு பண்ணக் கூடியதாக இருக்கும். வேதத்தை எழுதிய எழுத்தாளர்கள் இந்த மேகங்கள் மூலமாக ஆவிக்குரிய சில உண்மைகளைக் கொண்டுவர தேவன் அவர்களை ஏவினார். அந்த உண்மைகள் சிலவற்றை இங்கு காண்போம்.

1. பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் நாம் பார்க்கும்போது, தேவனுடைய மகிமை, அவருடைய பிரசன்னம் போன்றவற்றை உணர்த்த மேகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி; நான் உன்னோடே பேசும்போது ஜனங்கள் கேட்டு, உன்னை என்றைக்கும் விசுவாசிக்கும்படி நான் கார்மேகத்தில் உன்னிடத்திற்கு வருவேன் என்றார் (யாத். 19:9). தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு 10 கட்டளைகளைக் கொடுத்த போது இடிமுழக்கங்களும், மின்னல்களும், மலையின்மேல் கார்மேகமும் உண்டாயிற்று. தேவனுடைய அளவுக்கதிகமான வல்லமையை இவைகள் வெளிப்படுத்துகின்றன. ஜனங்கள் எல்லோரும் நடுங்கினார்கள். நாம் அவருக்கு மரியாதை செலுத்த அவருக்கு எல்லாத் தகுதியும் உள்ளது என்ற பாடத்தை இதிலிருந்து கற்றுக்கொள்கிறோம்.

2. இஸ்ரவேல் ஜனங்கள் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்பட்டுச் சென்ற போது தேவன் அவர்களைப் பெரிய மேகத்தை ஸ்தம்ப வடிவில் கொடுத்து அதன் மூலம் வழிநடத்திச் சென்றார். இதைப்பற்றி மற்றொரு வேதாகம எழுத்தாளர் கூறும் போது, நீர் உம்முடைய மிகுந்த மன உருக்கத்தின்படியே, அவர்களை வனாந்தரத்திலே கைவிடவில்லை. அவர்களை வழிநடத்தப் பகலிலே மேகஸ்தம்பமும், அவர்களுக்கு வெளிச்சத்தையும், அவர்கள் நடக்க வேண்டிய வழியையும் காட்ட இரவிலே அக்கினி ஸ்தம்பமும் அவர்களை விட்டு விலகவில்லை (நெகேமியா 9:19). இந்த மேகத்திலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய பாடம் என்னவென்றால், நாம் கட்டாயமாக தேவனைப் பின்பற்ற வேண்டும். நம் வாழ்நாள் முழுவதும் அவர் தான் நமக்கு நம்பகமான வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

3. நோவாவின் காலத்தில் பூமியின் மேல் மகாப் பெரிய வெள்ளம் வந்த போது, மேகத்திலே தேவன் வில்லை வைத்தார். நான் என் வில்லை மேகத்தில் வைத்தேன். அது எனக்கும், பூமிக்கும் உண்டான உடன்படிக்கைக்கும் அடையாளமாயிருக்கும் (ஆதி. 9:13). இந்த இடத்தில் வானவில்லையும், மேகத்தையும் ஒன்றாகச் சேர்த்து ஓர் அடையாளமாக வைத்தார். அவர் தம் உடன்படிக்கையை எப்போதும் காக்கிறவராயிருக்கிறார்.

4. சில நேரங்களில், தேவன் இந்த மேகத்தை நாம் அவருக்குக் கீழ்ப்படியும் போது நம்முடைய பாவங்களை அப்படியே முழுவதும் அகற்றி விடுதலுக்கு ஒப்பாகப் பேசுகிறார். ஏசாயா தீர்க்கதரிசி, **உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றி விட்டேன் என்கிறார்.** (ஏசாயா 44:22). எல்லா ஜனங்களும் நன்மை, தீமை அறியும் வயது வந்தவுடன் தேவனுடைய கட்டளையை மீறுகிறார்கள். தேவனுடைய பிரமாணத்தை மீறினால் அது பாவம் (1 யோவான் 3:4). ஆனாலும், தம்முடைய குமாரனை மரிக்கச் செய்ததினால் தேவன் நமக்கு ஒரு மீட்பின் திட்டத்தை ஏற்படுத்தினார். இத்திட்டத்திற்கு கீழ்ப்படியும் போது நித்திய இரட்சிப்புக்கு சொந்தமாகிறோம். (எபி. 5:8-9). இந்த மன்னிப்பு என்பது திரண்ட மேகத்தைப் போன்று நம்மேல் இருந்து நம்முடைய பாவங்களை மூடிப்போகுகிறது. இது நமக்கு எவ்வளவு ஒரு ஆறுதலான விஷயம்.

5. பாலஸ்தீன தேசத்திலே விடியற்காலத்திலே மேகம் தோன்றி, கொஞ்சம் கெஞ்சமாக மத்தியானத்திற்குள் காணாமல் போய் விடும். காரியங்கள் நம்மை விட்டு கடந்து சென்று விடுகிறது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நீதிமானாக வாழ்ந்து தேவனை ஆராதித்து வந்த பக்தன் யோபு மிகப்பெரிய செல்வந்தனாக இருந்தான். ஆனால், சாத்தான் யோபுவைப் பல வகைகளிலும் சோதிக்கும்படி தேவன் அனுமதித்து விட்டார். அவனுக்கிருந்த எல்லாம் அவனை விட்டுப் போய்விட்டது. **என் சுகவாழ்வு ஒரு மேகத்தைப் போல் கடந்து போயிற்று** (யோபு 30:15) என்கிறான். சரீர பிரகாரமான காரியங்களில் அதிகமான நம்பிக்கை வைக்காமலிருப்பது மிக, மிகச் சிறந்தது. பரலோக காரியங்களுக்காக நம் வாழ்க்கையை அர்ப்பணித்து நம்மை சிருஷ்டித்தவருக்கு உண்மையான ஆராதனை செய்வதே புத்திசாலித்தனமான செயலாகும்.

6. சில சமயங்களில் இந்த மேகங்கள் நம் சிருஷ்டிகரின் அளவுக்கதிகமான, வியக்கத்தக்க வல்லமையை விவரிக்கிறதாயிருக்கிறது. யோபுவிடம் ஒரு மனிதன், **மேகங்கள் தொங்கும்படி வைக்கும் நிறையையும், பூரண ஞானமுள்ளவரின் அற்புதமான செய்கைகளையும் அறிவீரோ? என்று** கேட்டான் (யோபு 37:16). கிறிஸ்துவுக்கு பல நூற்றாண்டுகள் முன்பு வாழ்ந்த யோபுவுக்கு தேவன் எப்படி மேகங்களைத் தொங்க வைத்திருக்கிறார் என்பது புரியாமல் இருந்திருக்க வாய்ப்புள்ளது. தண்ணீரை தனக்குள்ளே வைத்திருக்கிற மேகம் எப்படி தொங்கிக் கொண்டுள்ளது? முக்கியமான காரணிகளான ஈர்ப்பு விசை, நீர்த்துளிகளின் அளவு, காற்றின் அடர்த்தி போன்றவைகளால் ஒன்றுக்கொன்று சரி நிலையில் வைத்து மேகங்கள் தொங்கிக் கொண்டிருக்க உதவி செய்கிறது.

ஆம், என் அருமைத் தம்பி, தங்கைகளே, மேகங்களை எடுத்துக்காட்டாக வைத்துப் பெரிய உண்மைகளை கற்றுக் கொள்ளும்படி நம் அன்பான தேவன் நமக்கு உதவி செய்தார். இந்த உண்மைகளை மறவாமல் நம் வாழ்வில் கடைபிடித்து, எதிர்காலத்தில் சிறந்த கிறிஸ்தவர்களாக வாழ்வோம்! ✝

# நிழலும், நிஜமும்

*(The Shadow and the Reality)*

**Bro. J.H. James Rajakumar**

*அன்பானவர்களே!*

**ஆ**ண்டவரும் இந்த உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரில் வாழ்த்துக்களை சொல்லிக் கொள்ளுகிறேன். சென்ற மாதத்தின் கட்டுரையில் நிறைவு பகுதியில் எபிரெயர் 8ம் அதிகாரத்தை கவனித்தோம். இந்த 8ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் தேவன் பழைய உடன்படிக்கையை நீக்கவிட்டு புதிய உடன் படிக்கையை இயேசு கிறிஸ்துவின் மூலம் ஏற்படுத்தினார் என்று கவனித்தோம். இதைக் குறித்து சற்று கூர்மையாக கவனிக்கலாம் என்று நினைக்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு அநேக நாமகரண மக்கள் ஊழியர்கள் பாவ அறிக்கை செய்து விட்டு மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுவிட்டு, நாங்களும் முழுக்கு பெற்றுவிட்டோம், நாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்று பிடிவாதமாக பேசுகிறதையும் சாதிக்கிறதையும் கண் கூடாகக் காண்கிறோம். இப்படிப்பட்ட நண்பர் களுக்கு சற்று விளக்கம் அளிக்கலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவது உடன்படிக்கை என்றால் என்ன? உடன்படிக்கை என்பது இருதிறத்தார் சில அல்லது பல உறுதி மொழிகளைஎழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ ஒப்புக்கொள்வது என்பது எல்லோருக்கும் தெரிந்து ஒன்று இதை நாம் விளக்க வேண்டிய அவசியமில்லை. இதனடிப் படையில் பழைய உடன்படிக்கை என்பது தேவனுக்கும் இஸ்ரவேலருக்கும் நடந்த ஒரு ஒப்பந்தம். அதாவது தேவனும், இஸ்ரவேலின் 12 கோத்திரத் தாரும் செய்து கொண்ட ஒரு ஒப்பந்தம். இந்த ஒப்பந்த வார்த்தைகளை தேவன் சீனாய் மலை யிலிருந்து தூதன் மூலமாக பேசினார். (அப். 7:38) ஆனால், ஜனங்கள் அதைக் கேட்டு பயந்தார்கள், தேவன் பேச வேண்டாம் அவர் பேசினால் நாங்கள் சொத்துபோவோம். நீரே எங்களோடு பேசும் என்று மோசேயினிடம் கேட்டார்கள் (யாத். 20:18,20; எபி. 12:18,21).

ஆகையால், மோசே எல்லா பிரமாணங்களையும் பெற்றுக் கொண்டு அவைகளை புஸ்தகமாக எழுதி அதை இஸ்ரவேல் மக்களுக்கு வாசித்து காண்பித்தார். ஜனங்களும் ஆமென், ஆமென் என்று ஒப்புதல் அளிக்க வேண்டும் (உபா. 27:1,26).

தேவன் எழுத்து மூலமாய் அவருடைய ஒப்பந்த வார்த்தைகளைக் கொடுத்தார். இஸ்ரவேல் மக்கள் வாய்மொழியாக ஒப்பந்தம் அளித்தார்கள். இது பழைய ஏற்பாடு அல்லது ஒப்பந்தம் அல்லது உடன் படிக்கை அதின் சாரம்சம் தேவன் கொடுத்த கட்டளைகளை கைகொண்டு நடந்தல். அவர் சொன்ன ஆசீர்வாதங்களைத் தருவார். அதை மீறி நடந்தால் அவர் சொன்ன சாபங்கள் வரும் (உபாக. 28:1,14; 15,68).

கர்த்தர் இந்த பழைய உடன்படிக்கையை உயிரோடு இருந்த இஸ்ரவேல் மக்களோடும் (உபா. 29:1). இனிமேல் பிறக்கப்போகும் சந்ததி யாரோடும் இந்த உடன்படிக்கை பண்ணப்பட்டது. (உபா. 29:14,15). ("இன்று இங்கே நம்மோடே இராதவர்களோடேயும் கூட அதைப் பண்ணுகிறேன்"). இந்த உடன்படிக்கை தேவனுக்கும் இஸ்ரவேல் 12 கோத்திரத்தாருக்கும் இடையிலே ஒப்புக் கொள்ளப் பட்டது. இதன் மத்தியஸ்தர் மோசே. அந்த காலத்தில் தேவன் நாயகராகவும் அதாவது புருஷனாகவும் இஸ்ரவேல் நாயகியாகவும், அதாவது, மனைவியாகவும் சொல்லப்பட்டது (எரே. 31:32). தேவனுடைய மணவாட்டியாக பரிசுத்தமாயிருக்க வேண்டிய இஸ்ரவேல் அந்நிய தெய்வங்களை வணங்கி அந்நிய ராஜாக்களை நம்பி பற்றிக் கொண்டு அவர்களுடைய தெய்வ வழிபாடுகளையும், வழக்கங்களையும் பாரம்பரியங்களையும் கைகொண்டபடியால் அது ஒரு விதமாக ஆவிக்குரிய வேசித்தனம் மற்றும் விபச்சாரமாயிற்று. ஆகவே தேவன் அவர்களை அந்த மனைவியை தள்ளிவிடுவது நியாயமாகும் (மத். 5:32). ஆகையால், அந்த உடன்படிக்கையையும் முறித்துப் போடலாம். இப்படித்தான் பழைய உடன்படிக்கை அவமாய்ப் போனது (எரே. 31:32; எபி. 8:9). ஆகையால், தேவன் முதலாவதை நீக்கிப் போட்டு இரண்டாவதை நிலைநிறுத்தினார் (எபி. 10:9).

அடுத்தது புதிய உடன்படிக்கையைப் பற்றி பார்ப்போம். புதிய உடன்படிக்கையை புரிந்து கொள்வதற்காக நாம் சற்று நேரம் பூமிக்குரிய திருமணத்தைப் பற்றி கவனிக்கலாம் என்று எண்ணுகிறேன். திருமணம், விவாகம், பரிசுத்த விவாகம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. பொதுவான வழக்குச் சொல்லாக கலியாணம் என்று சொல்லுகிறோம். எந்த வார்த்தையைப் பயன்படுத்தினாலும் அர்த்தம் சொல்லுகிறோம். அநேகரிடத்தில் திருமணம் என்றால் என்ன? என்று கேட்டால் தாலி கட்டுவது, மோதிரம் போடுவது, மாலை மாற்றிக்கொள்வது, பைபிள் மாற்றிக் கொள்வது, இருமனம் ஒன்று பட்டால் திருமணம் இப்படியெல்லாம் சொல்லுகிறார்கள். ஆனால், திருமணம் என்பது ஓர் உடன்படிக்கை என்று வேதம் சொல்லுகிறது அல்லது தேவன் சொல்லுகிறார் மல்கியா 2:14ல் " ஏன் என்று

கேட்கிறீர்கள், கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார்; உன் தோழியும், உன் உடன்படிக்கையின் மனைவியுமாகிய அவளுக்கு நீ துரோகம் பண்ணினாயே " இந்த வசனத்தில் உடன்படிக்கையின் மனைவி என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தக் கருத்தின்படி திருமணம் என்பது ஓர் உடன்படிக்கையாயிருக் கிறது. இது கிறிஸ்தவ திருமணங்களில் மிகவும் தெளிவாயிருக்கிறது. திருமணத்தில் திருமணம் நடத்தி வைக்கும் ஊழியர் மணமக்களிடம் அவர்கள் ஒருவரை பார்த்து ஒருவர் அதாவது மணமகளைப் பார்த்து மணமகனும், மணமகனைப் பார்த்து மணமகளும் இருவரும் கையை பிடித்துக் கொண்டு சொல்லும்படி சில வார்த்தைகளைச் சொல்லு வார்கள். அதை அவர்கள் மாறாமல் சொல்லுவார்கள். அந்த வார்த்தைகள் ஏறக்குறைய எப்படியிருக்குமென்றால் இன்னாராகிய நான், இன்னா ராகிய உன்னை இன்று முதல் என் வாழ்க்கையின் கணவராக (பெண் சொல்வது) மனைவியாக (மாப்பிள்ளை சொல்வது) ஏற்றுக்கொண்டு வாழ்விலும் தாழ்விலும், அகத்திலும் சுகவீனத்திலும், இன்பத்திலும், துன்பத்திலும் மரணம் நம்மை பிரிக்கும் வரை பிறர் முகம் பாராமல் (மற்றவர்களை கணவனாக அல்லது மனைவியாக பாராமல்) கர்த்தரு டைய தூய நியம சட்டங்களின்படி தெய்வீக பயத்தோடு உம்மையே பற்றிக் கொண்டு ஆதரித்து காப்பாற்றுவேன் என்று மணமகனும் தெய்வீக பயத்தோடு உம்மையே பற்றிக் கொண்டு கீழ்ப்படிந்து நடப்பேன் " என்று மண மகளும் சொல்லுவார்கள். இந்த வார்த்தைகள் தான் வாழ்க்கையின் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை இதற்கு பெயர்தான் திருமணம், விவாகம், பரிசுத்த விவாகம் அல்லது கலியாணம் என்பதெல்லாம். இந்த ஒப்பந்த அல்லது உடன்படிக்கை யின் வார்த்தைகள் மணமகனுக்கும், மணமகளுக்கும் மனப்பாடமாக தெரிந்திருக்க வேண்டும். இந்த வார்த்தைகள் ஏதோ திருமண நேரத்தில் சொல்லி விட்டு அத்தோடு மறந்து விடுவது அல்ல. இந்த ஒப்பந்த அல்லது உடன் படிக்கையின் வார்த்தைகளை வாழ்நாள் முழுவதும் மனதில் நினைவில் வைத்து வாழ வேண்டும். ஏனென்றால், இந்த உடன் படிக்கைக்கு தேவன் சாட்சியாயிருக்கிறார். திருமணத்தின் நேரத்தில் அன்பளிப்பு அளிக்கிறவர்கள் இந்த வார்த்தைகள் அடங்கிய சட்டத்தைக்கூட அன்பளிப்பாக அளிக்கலாம். அதில் தேவன் இந்த உடன்படிக்கைக்கு சாட்சியாயிருக் கிறார் என்றும் பதிவு செய்யலாம். பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் இந்த சட்டங்களை கற்பலகையில் எழுதினார். மேலும், பலி பீடத்தின் கற்களிலும் பதிவு செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டார். (உபா. 27:1,8). ஆனால், அவர்களில் அநேகர் தங்கள் இருதயத்தில் தேவனுடைய வார்த்தைகளைப் பதிவு செய்யாமல் விட்டுவிட்டார்கள்.

+

(தொடரும்)

# அடிப்படைக்குத் திரும்புவோம்

**Danny Cline**

**ப**ல நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவன் துக்கத்தோடு தம்மு டைய தீர்க்கதரிசியாகிய ஏரேமியா மூலமாக இவ்விதமாகப் பேசினார். "திகைத்துத் திடுக்கிடத்தக்க காரியம் தேசத்திலே நடந்து வருகிறது. தீர்க்கதரிசிகள் கள்ளத் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள்; ஆசாரியர்கள் அவர்கள் மூலமாய் ஆளுகிறார்கள்; இப்படியிருப்பது என் ஜனத்துக்குப் பிரியமாயிருக்கிறது; ஆனாலும் முடிவிலே என்ன செய்வீர்கள்? என்று ".

தேவன் எப்போதுமே தமது சாயலிலும் தமது ரூபத்தின்படியேயும் உண்டாக்கின மக்கள் மீது அக்கறை உடையவராகவே இருக்கிறார் (ஆதி. *1:26,27*), ஏனென்றால், அவர் அழிவே இல்லாதவர், மனித இனத்தின் முடிவு, அதாவது பரலோகம் அல்லது நரகம் அவருக்குத் தெரியும். தேவன் எப்போதுமே மனிதனிடத்தில் அன்பு கூர்ந்து அவனுடைய தேவைகள் எல்லாவற்றையும் சந்தித்து வருகிறார். ஆவிக்குரிய பிரகாரமாகவும், சரீரப் பிரகாரமாகவும் எந்தப் பாதையில் நடக்க வேண்டுமென்பதை ஆரம்பத்தி லிருந்தே மனிதன் அறிந்து கொள்ள மனிதனிடத்தில் தயவாயிருக்கிறார். ஆயினும், ஒவ்வொரு காலத்திலும் மனிதன் தேவனுடைய வழியிலிருந்து வழி தப்பி, முற்றிலும் வித்தியாசமான பாதையில் நடந்து கொண்டிருக் கிறான்.

மனிதன் உண்மையில்லாதவனாக இருந்த போதிலும் மனிதன் மீதான தேவனுடைய அக்கறை மாறவே இல்லை. தேவனுடைய அற்புதமான குணாதிசயங்களில் ஒன்று, அவர் மனித இனத்தின் மீது நீடிய பொறுமை யுடையவராக இருப்பது. (II பேதுரு *3:9*). ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக தேவன் எரேமியா மூலமாக மனிதர்களிடத்தில் வைத்த கேள்வி, ஆம், மகா பெரிய கேள்வி. இன்றும் அபாயகரமாக இருக்கிறது; " ஆனாலும், முடிவிலே நீங்கள் என்ன செய்வீர்கள்? " என்று.

அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்தியர் *6:7,8* வசனங்களில் சொல்லியிருக்கிறபடி, ஒரு நாளில், நியாயத்தீர்ப்பு நாளில் நாம் தேவனை எதிர்கொள்வோம். " மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்; மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்".

மனிதனுடைய பூமிக்குரிய வாழ்க்கையின் முடிவு அவர் இருப்பது போலவே நிச்சயமாயிருக்கிறது. இந்த பூமிக்குரிய வாழ்க்கை முடிந்த பிறகு, இரண்டு காரியங்கள் மட்டுமே இருக்கும். நரகத்தில் நித்திய ஆக்கினை அல்லது பரலோகத்தில் நித்திய ஜீவன். இவைகளைப் பற்றி கிறிஸ்து (மத். *25:46*) போதித்திருக்கிறார்.

ஆரம்பத்திலிருந்தே தேவன், மனிதன் இந்த உலகத்தில் எப்படி வாழ வேண்டும் என்பதை போதித்து வருகிறார். முதலாவது, அவர் நேரடியாக மனிதனிடத்தில் பேசினார்; அதன் பின்பு தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசினார்; கடைசியாக, அவர் தம்முடைய வார்த்தையாகிய இயேசுவை மனித உருவத்தில் அனுப்பினார். அவர் தான் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து. நாம் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படி ஓர் எடுத்துக் காட்டான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்.

இயேசு நம்முடைய அனுதின வாழ்க்கையில் வழிகாட்டும் படியாக அருமையான காரியங்களை போதித்திருக்கிறார் (எபி. 1:1,2; 1 பேதுரு 2:21). மத். 5,6,7 அதிகாரங்களில் இயேசு செய்த மலைப் பிரசங்கத்தைப் பாருங்கள். அதில் இயேசு ஆழமான சத்தியங்களைப் பேசியிருக்கிறார்; ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... துயரப்படுகிறவர்கள் பாக்கிய வான்கள்...., சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... இரக்கமுள்ளவர்கள் பாக்கிய வான்கள்.... இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்... நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்... இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.... இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள்..... இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. இன்னும், உங்கள் சத்துருக்களைச் சிநேசியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள், பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப் பிரமாணமும், தீர்க்கதரிசனங்களுமாம்.

இவைகளெல்லாம் தேவனுடைய வார்த்தையின் அடிப்படை போதனைகள். நம்முடைய பக்தி வாழ்வுக்கு ஒரு வடிவம் கொடுக்க நாமெல்லாரும் இதனிடத்திற்கு திரும்ப வேண்டும். ஆனால், இன்றைய உலகத்தில் எதிர்மறையான வழிமுறை நாடப்படுகிறது. அச்சிடப்பட்ட தகவல்களும், ஊடகங்களும் பெருகிவிட்டபடியால் மக்கள் தவறாக வழி நடத்தப்படுகிறார்கள். எல்லா வகையிலும் ஒழுக்கக்கேடு தலைதூக்கி நிற்கிறது. தேவன் வெறுக்கின்ற காரியங்களான விவாகரத்து, ஓரினச் சேர்க்கை, பெருமை, பொய், கொலை, கருக்கலைப்பு, பண ஆசை போன்ற காரியங்கள் மகிமைப்படுத்தப்படுகின்றன. இது எரேமியாவின் நாட்களில் தேவன் வானத்திலிருந்து பூமியைப் பார்த்து பேசின அதிர்ச்சியூட்டும் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்டுகிறது. அவர்கள் அருவருப்பானதைச் செய்ததினிமித்தம் வெட்கப்படுகிறார்களோ? பரிச்சேதம் வெட்கப் படார்கள், நாணவும் அறியார்கள்; ஆதலால் விழுகிறவர்களுக்குள்ளே விழுவார்கள்; நான் அவர்களை விசாரிக்குங்காலத்தில் இடறுண்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரேமியா 6:15).

மக்கள் சில காரியங்களை தனிப்பட்ட முறையில் கூட பேசுவதற்கு வெட்கப்பட்ட காலம் போய் இப்போது அதே காரியத்தை எவ்வித நாணமுமின்றி வெளிப்படையாகவே பேசுகிறார்கள். அந்தரங்கத் தலைப்புகள் விவாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் தொலைக்காட்சி மூலமாக நம்முடைய வீடுகளில் கூட காட்டப்படுகிறது. அதே விஷயங்கள் இலக்கிய வடிவத்தில் எல்லா மொழிகளிலும் எல்லா இடங்களிலும் கிடைக்கிறது.

தேவன் வானத்திலிருந்து இறங்கி வந்து ஜனங்கள் தொலைக்காட்சி பார்ப்பதையோ, அவர்கள் விரும்புகிற இலக்கியத்தைப் படிப்பதையோ தடைசெய்யமாட்டார். அதுபோல, மக்கள் எதைச் செய்ய விரும்புகிறார்களோ அதைத் தடுக்கவுமாட்டார். அதை அவர் ஏதேன் தோட்டத்தில் கூட செய்யவில்லை. தேவன் ஆதாமையும், ஏவாளையும் உண்டாக்கி தோட்டத்திலே வைத்து நன்மை, தீமை, கீழ்ப்படிதல், கீழ்ப்படியாமை போன்றவற்றில் எதை வேண்டுமானாலும் தெரிந்து கொள்ளட்டும் என்று சுதந்திரத்தைக் கொடுத்தார். அவருடைய சித்தத்திற்கு அப்பால் அவர்கள் போகக்கூடாது என்று எச்சரித்தார்; அவர்கள் கீழ்ப்படியாமல் போகும் அந்த நாளில் சாகவே சாவார்கள். அதாவது, ஆவிக்குரிய பிரகாரமாக அவர்கள் தேவனிடத்திலிருந்து பிரிந்து, சரீரப்பிரகாரமாக சாகத் தொடங்கினார்கள்.

ஆனால், மனிதன் ஏதேனில் பாவம் செய்தான், அது தவறாக இருந்த போதிலும் மனிதன் தன் சொந்த அல்லது சுயமுடிவை எடுக்க தேவன் தடை செய்யவில்லை.

தீமையானது இன்றும் காணப்படுகிறது; சொல்லப் போனால் அது முன்பை விட மிக வல்லமையாக பல்வேறுபட்ட கோணங்களில் காணப்படுகிறது. நாம் தீமையை தெரிந்தெடுக்கும்போது தேவன் நம்மைத் தடுக்கப் போவதில்லை. ஆனால், நாம் என்ன செய்யவேண்டும், என்ன செய்யக் கூடாது என்பதை தேவன் சொல்லியிருக்கிறார். எனவே, இந்த உலகத்தினால் கறைபடாதபடி பார்த்துக் கொள்வது நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. அது தேவனுடைய பொறுப்பல்ல (யாக். 1:27).

இளம் வயதினருக்கு முதிர் வயதான சாலொமோன் ஞானி இவ்விதமாக புத்திமதி சொல்கிறார். "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி. நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு; இளவயதும் வாலிபமும் மாயையே. நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை " என்று (பிர. 11:9,10; 12:1).

உங்கள் வாழ்க்கைக்கு எது தூண்டுகோலாக இருக்கிறது? உங்கள் வாழ்க்கையை எது கட்டுப்படுத்துகிறது? வேதாகமத்தில் காணப்படுகின்ற தேவனுடைய சித்தம் உங்களைக் கட்டுப்படுத்துகிறதா? அல்லது உலகம் உங்களைக் கட்டுபடுத்துகிறதா?. ✝

# பாடம்-36. பிரிவினைகளை ஆதரிப்பது

Bro. K. பாஸ்கர்

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல.

கிறிஸ்தவர்களுக்குள்ளே இன்று ஆயிரக்கணக்கான சபைகள் பல பெயர்களில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு தலைவர், ஒவ்வொரு உபதேசம், ஒவ்வொரு ஆராதனைகள் என்று இருக்கின்றது. இப்படிப்பட்ட பிரிவினைகளை அநேகர் அதரிப்பதால் அது வளர்ந்து, வெட்ட முடியாத மரங்களாக இன்று காட்சியளிக்கின்றது. இது குறித்து பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று இந்த பாடத்தில் படித்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையைத் தெரிந்து கொள்வோம்!

## I. பிரிவினை என்பது பாவச் செயல்

பிரிவினை என்பது ஏதேன் தோட்டத்திலிருந்தே ஆரம்பமாயிற்று. எப்படியெனில், முதல் தம்பதிகள் ஆதாம், ஏவாள் என்பவர்கள் சிருஷ்டிப்பின் நாளிலிருந்து சிருஷ்டிகராகிய தேவனிடம் ஐக்கியமாயிருந் தார்கள். தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தார்கள் (ஆதி. *1:27,28, 2:22,24*). தேவனிடம் ஐக்கியமாயிருந்த ஆதாம், ஏவாள் கணவன், மனைவியை தேவனிடமிருந்து பிரிப்பதற்கு சாத்தான் சர்ப்பத்தின் வடிவிலே தந்திரமாக செயல்பட்டான். அவனுடைய தந்திரமான பேச்சில் மயங்கிப் போனது ஏவாள். எனவே, அவள் வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள். இறுதியில் இருவரும் பாவஞ் செய்து தேவனை விட்டுப் பிரிந்தார்கள் (ஆதி. *3:1,9*).

பிரிவினை என்ற பாவச் செயலை முறியடித்து மனுஷனை தேவனோடு ஒன்று சேர்க்கவே தேவன் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஸ்திரீயின் வித்தின் மூலமாக அனுப்பச் சித்தமானார் (ஆதி. *3:15*) அதன்படி ஸ்திரீயின் மூலமாகவும், பரிசுத்த ஆவியால் இயேசு கிறிஸ்து பிறந்தார் (மத். *1:18*) அவர் முப்பதாவது வயதில் ஞானஸ்நானம் பெற்றுத் தாமதமில்லாமல் பிரசங்கித்தார். அவர் மலைப்பிரசங்கத்தில் காணிக்கை, ஆராதனை இவைகளை விட முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து என்று போதித்து ஒற்றுமையை வலியுறுத் தினார் (மத். *5:23,24*) நம்மை தேவனோடு ஒப்புரவாக்கும்படி இயேசு கிறிஸ்து சிலுவையிலே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் (ரோமர் *5:10*; 2 கொரி. *5:18*). அவர் மூலமாக இந்த ஒப்புரவாகுதலின் ஊழியத்தை அப்போஸ்தலர்கள் பெற்றுக்

கொண்டனர். அவர்கள் ஒப்புரவாகுதலின் உபதேசத்தைப் போதித்து தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று போதித்தனர் (2 கொரி. 5:19,20).

சபையின் ஆரம்ப நாட்களில் சபையின் விசுவாசிகள் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு கிறிஸ்துவின் சபையை மகிமைப்படுத்தினர் (அப். 2:42,47). இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அதாவது முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு சபை வளர்ந்து கொண்டு வரும் சமயத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் எபேசு சபையின் மூப்பர்களை அழைத்து எச்சரித்து சொன்னது என்னவென்றால், *"ஆகையால், உங்களைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களில் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவை களைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்"* என்று எச்சரித்தார் (அப். 20:28,30). அதாவது, சபைக்குள் பிரிவினை வரும் என்று எச்சரித்துக் கூறினார். இதன்படி முதல் நூற்றாண்டு இறுதியில் அதாவது, அப்போஸ்தலர் எல்லாரும் இரத்த சாட்சியாய் மரித்து அப்போஸ்தலன் யோவான் மட்டும் இருந்த நாளில் கிறிஸ்துவின் சபையிலிருந்து பிரிந்து போனார்கள் என எழுதினார். (1 யோவான் 2:19). பிரிந்து போகிறவன் தன் சுய இச்சையின்படி செய்யப் பார்க்கிறான் என்று வசனப்படி தங்கள் சுய இச்சையை நிறை வேற்றப் பிரிந்து போனார்கள் (நீதி. 18:1).

சுய இச்சை என்பது பாவத்தின் செயல் (யாக். 1:14,15) இன்று நாம் காண்கின்ற எல்லா பிரிவினைச் சபைகளும் மனிதனுடைய சுய இச்சை யினால் உண்டாயின! அனைத்தும் பாவத்தின் செயலாக உள்ளது. எனவே, பிரிவினை என்பது பாவத்தின் செயல்

## II. பிரிவினையை ஆதரிப்பது

பிரிவினை என்பது பாவத்தின் செயலாக இருப்பதால் கர்த்தர் அதை வெறுக்கின்றார். ஆம், அவர் ஆறு காரியங்களை வெறுக்கின்றார். ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள் அவையாவன : மேட்டிமையான கண், பொய் நாவு, குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்தும் கை, துராலோசனை யைப் பிணைக்கும் இருதயம், தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால், அபத்தம்பேசும் பொய் சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் ஆகிய இவைகளைக் கர்த்தர் வெறுக்கின்றார் (நீதி. 6:17.15). கர்த்தர் வெறுக்கும் காரியங்களை நாமும் வெறுக்க வேண்டும். சகோதரருக் குள்ளே விரோதத்தை உண்டு பண்ணி உற்சாகப்படுத்தும் செயலும் பாவமாக இருக்கின்றது. யூனிட்டி (Unity) யாக ஒரே கிறிஸ்துவின் சபையாக செயல்பட்டவர்களை யூனியன் (Union) களாக செயல்பட வைத்து அதாவது, பல சபைகளாக செயல்பட வைப்பது பாவத்தின் செயலாக உள்ளது. கர்த்தர் யூனிட்டியைத் தான் ஆசீர்வதிக்கிறார். யூனியன்களை அல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பவுல் கொரிந்து பட்டணத்திலிருக்கும் சபையாருக்கு எழுதும் பொழுது *" என் சகோதரரே, உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள்*

*உண்டென்று குலோவேயாளின் வீட்டாரால் உங்களைக் குறித்து எனக்கு அறிவிக்கப்பட்டது உங்களால் சிலர் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் நான் கேபாவைச் சேர்ந்தவ னென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்லுகிறேன் கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?* " என்று கோபப்படுகிறார் (1 கொரி. 1:11,13) அதாவது, அவர்களுக்குள் பிரிவினை இருந்தது அதை அவர்களில் சிலர் அதை உற்சாகப்படுத்தியிருந்தார்கள். ஆகவே, பவுல் கோபமாக எழுதுகிறார். பிரிந்தவர்களை ஐக்கியப்படுத்தி சமாதானம் பண்ணுவதே தேவனுடைய பிள்ளைகளின் செயலாக உள்ளது. (மத். 5:9). பிரிந்தவர்களை உற்சாகப் படுத்துவது பிசாசின் செயலாக இருக்கிறது (1 கொரி. 7:5). இப்படிப்பட்ட அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ள வேண்டும். (எபே. 5:11) ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பதுபோல சபை இரண்டு பட்டால் அநேகருக்குக் கொண்டாட்டமாக இருக்கிறது.

உதாரணமாக, தாவீது என்ற அரசன் இஸ்ரவேல் ஜனங்களை அரசாட்சி செய்து கொண்டிருந்த நாட்களில் ஐக்கியமாயிருந்த இராஜ்யத்தில் அகித்தோப்பேல் என்ற துஷ்டன் தாவீதின் மகன் அப்சலோமை தூண்டி விட்டு தாவீதுக்கு விரோதமாக எழும்பச் செய்தான். தாவீது ஆவிக்குரிய மனிதர். ஆகவே, இராஜ்யத்தை அப்சலோமிடத்தில் விட்டுக் கொடுத்து விட்டு வனாந்திரத்திற்கு சென்று விட்டார். பிரிவினை செய்த அப்சலோமை, அகித்தோப்பேல் உற்சாகப்படுத்தினார். அந்நாட்களில் அகித்தோப்பேல் சொல்லும் ஆலோசனை அப்சலோமுக்கு தேவனுடைய வாக்கைப்போல இருந்தது. (2 சாமு. 16:23). தகப்பனும், மகனும் பிரிந்திருப்பது அகித்தோப்பேலுக்கு கொண்டாட்டமாக இருந்தது.

சபையின் ஆரம்ப நாட்களில் பவுலுக்கும், பர்னபாவுக்கும் கருத்து வேறுபாடு வந்தது. ஆனால், அவர்கள் சபையைப் பிரிக்கவில்லை. உபதேசத்தை மாற்றி போதிக்கவில்லை. ஒரே கிறிஸ்துவின் சபையிலே போதித்து வந்தனர். ஊழியத்தை வெவ்வேறுதிசைகளுக்கு சென்று போதித்தனர். (அப். 15:36,40). சகோதரருக்குள் கருத்து வேறுபாடு வருவது இயற்கை அதற்காக சபையைப் பிரிப்து, உபதேசத்தைப் பிரிப்பது கூடாத செயல்! ஆனால், இன்று ஆயிரக்கணக்கான சபைகள் பிரிந்து செயல்படு கின்றது. அவைகளை மக்கள் ஆதரிக்கின்றனர். ஆனால், தேவன் ஆதரிக்க வில்லை. ஒற்றுமையாயிருக்க வேண்டும் என்றே இயேசு ஜெபித்தார். (யோவான் 17:20,21).

## III. பிரிவினையை ஆதரிப்பவர்களின் முடிவு

பிரிவினையை ஆதரித்தபோது அகித்தோப்பேலுக்கு மகிழ்ச்சியாகத் தான் இருந்திருக்கும். அது நல்லது என்று எண்ணியிருப்பான், பிரியாமல் ஒற்றுமையாக இருந்தால் தான் வளர முடியாது என்று நினைத்திருப்பான்!

இப்படி நினைப்பது போல இன்றும் பிரிவினையை ஆதரிப்பவர்கள் நினைப்பார்கள். ஆனால், அதின் முடிவைக் குறித்து யாரும் நினைப்ப தில்லை. மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு. அதின் முடிவோ மரணவழிகள் என்று வேதம் கூறுகின்றது (நீதி. 16:25) அகித்தோப்பேல் பிரிவினையை ஆதரித்தான். அவனின் முடிவு குறித்து வேத வசனம் கூறுவதைக கவனியுங்கள். அவன் நான்றுகொண்டு செத்தான் (2 சாமு. 17:23).

மோசேயின் நாட்களில் நடந்த ஒரு சம்பவத்தை அறிந்து கொள்வோம். அவர் இஸ்ரவேலர்களை எகிப்து தேசத்திலிருந்து, கானான் தேசத்திற்கு வனாந்திர வழியாக வழிநடத்திச் சென்றார். அப்போது மோசேயின் வழிநடத்துதல் சரியில்லை என்று நான்குபேர்கள் பிரிவினை செய்தார்கள். அவர்களுக்கு ஆதரவாக இருநூற்று ஐம்பது பேர்கள் மோசேக்கு விரோதமாக எழும்பி இஸ்ரவேலர் சபையில் பிரச்சனையை உண்டு பண்ணினார்கள். அப்போது மோசே முகங்குப்புற விழுந்து கர்த்தரை நோக்கி ஜெபித்தார் (எண். 16:4,15).

மோசே இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து அடிமைத்தனத் திலிருந்து விடுதலை வாங்கிக்கொடுக்க அவர் பட்ட பாடுகள், பிரயாசங்கள் அனைத்தையும் அவர்கள் மறந்து அவருக்கு விரோதமாகக் கூட்டங் கூடினார்கள் நன்றியில்லாத இரு நூற்று ஐம்பது பேர்கள். அவர்கள் அப்படி செயல்படும்போது சந்தோஷமாகத்தான் இருந்திருக்கும். ஆனால், அந்த சந்தோஷம் நீடித்திருக்கவில்லை. தேவன் அவர்களை நியாயந்தீர்க்கும்படி எழுந்தார். தேவன் அவர்களை இஸ்ரவேல் சபையிலிருந்து நீக்கி அவர்களை பிரித்து விடும்படி மோசேக்கு கட்டளையிட்டார். ஒரே நிமிஷத்திலே அவர்களை அதமாக்குவேன் என்றார் (எண். 16:21). அதன்படி தேவன் பிரிவினை ஏற்படுத்தின நான்கு பேர்களையும், பிரினைவிக்கு ஆதரவு கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தின இருநூற்று ஐம்பது பேர்களையும் நிலம் பிளந்து பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும், அவர்கள் வீடு ளையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கி விட்டது. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள். பூமி அவர்களை மூடிக் கொண்டது. இப்படிச் சபையின் நடுவிலிருந்து அழிந்துபோனார்கள் (எண். 16:32,33). பிரிவினை யை ஆதரிக்கிறவர்களின் முடிவு அழிவாக உள்ளது. ஆகவே பிரிவினை சபைகளை தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. பிரிவினையை ஆதரிக்கிறவர் களையும் தேவன் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக, அவர்கள் அனை வரையும் தண்டிக்கிறார். எனவே, நாம் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும், ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன் (1 கொரி. 1:10). ✝

**(தொடரும்)**



கலந்து கொண்டவர்கள்



பெண்கள் வகுப்பு



உழியர்களில் சிலர்



ஆண்கள் வகுப்பின் போது



கருத்தரங்கில் சிறுவர்கள்



பெண்களில் ஒரு பகுதி



திருமுழுக்குப் பெற்றவர்களுடன் உழியர்கள்



வேதாகமம் மற்றும் புத்தகங்கள் விநியோகம்




ஊட்டி உழியர்கள் கூட்டம் [அக்-22,23]





தேநீர் இடைவேளையின் போது...


Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014



## எங்களது இதர வெளியீடுகள்












சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

**தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்**

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்**
**மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்

## அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு , இந்தியா.


Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor: S. Rajanayagam